கிளை நூலகம்

விலை : 20.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 04 ஞாயிற்றுக்கிழமை (20.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(தி-9363)

# ஜே.வி.பியால் முடிவது த.தே.கூவால் முடியவில்லை

## சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி குத்தல்

(கொழும்பு) ஜே.வி.பியில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து பல விடயங்களை செய்யும் போது, பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில பிரச்சினைகளை தீர்க்க முடியாமல் இருப்பது கவலைக்குரியது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளரும் கோப்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சாட்டியுள்ளார். (31-ம் பக்கம் பார்க்க...)



## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த் திருவிழா



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தப் பெருமானின் தேர்த் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.


காலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று காலை 7 மணிக்கு முருகப் பெருமான் தேரில் ஆரோகணிக்கவுள்ளார். 32☛

## வாழ்த்துகிறோம்

தரம் 5புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவ, மாணவியர் சிறப்பான மதிப்பெண்களை பெற வாழ்த்துகின்றோம்.

-வலம்புரி கல்விப் பிரிவு

## நல்லூர் வேலவனின் நேற்றைய சப்பறத் திருவிழாக் காட்சி



## வடக்கு - தெற்கு இடையில் நம்பிக்கையை ஏற்படுத்த இராணுவம் முயற்சி - தளபதி



(கொழும்பு)

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சிலர் செயற்பட்டுவருவதாக இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்கள் தீவிரவாதத்தை நிராகரித்துள்ளனர். ஆகையால் வடக்கு மக்களுக்கும் தெற்கில் உள்ளவர்களுக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்த இராணுவம் முயற்சித்துவருகின்றது.

அரசாங்கம் தூர நோக்குடன் நாட்டில் நட்புறவு மிக்க சூழலை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.எனினும் சிலர் இரு தரப்பினரிடத்திலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்முயற்சியை தடுக்கும் வகையில் செயற்பட்டு வருவதாக இராணுவத் 31☛

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டியும் உந்துருளியும் மோதியதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் 31☛

## வளர்ப்பு மாடு முட்டி உரிமையாளர் பலி

(யாழ்ப்பாணம்)

சாப்பாடு வைக்கும் போது வளர்ப்பு மாடு முட்டி மோதியதில் மாட்டின் உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் வேலணை 31☛

## இந்திய இராணுவ அதிகாரிகள் நேற்று கோப்பாயில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

இந்திய தெற்கு பிராந்திய இராணுவ படைகளின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எம்.ஹறிஸ் 31☛

## ரெலோவின் உயர்மட்ட கூட்டம் வவு.வில் இன்று



### டெனீஸ்வரன் பங்கேற்க மாட்டாராம்!

(யாழ்ப்பாணம்)

ரெலோவின் உயர்மட்டக் கூட்டம் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது. வவுனியாவில் நேற்றுக் காலை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரெலோவின் மத்திய குழு கூட்டம் 02☛

## இராணுவத்தில் இருந்து தப்பிய 724 பேர் கைது!

(கொழும்பு)

இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புக்களில் 700க்கும் அதிகமான இராணுவத்தில இருந்து தப்பிச் சென்றவர்கள் கைது 31☛

## ஜீவ சமாதி அடைய முருகன் உணவு தவிர்ப்பு



(சென்னை)

ஜீவசமாதி அடைய அனுமதிக்கக் கோரி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளி முருகன், வேலூர் சிறையில் 31☛

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(தி-9368)

புதிய சேவைகள் அறிமுகம்
(மகாராஜா பொதிகள் சேவை

வெளிநாடுகளுக்கான உங்கள் மேலதிக பொதிகளை நம்பகரமாக குறைந்த கட்டணத்தில் விரைவாக அனுப்ப நாட வேண்டிய ஒரே இடம்.

G.T.V enterprises (pvt) Ltd

| | |
|---|---|
| G.T.V Express | இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4338, 021 492 5024 |
| [illegible] | இல.25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ரெலோவின்...

இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் இதனை உறுதிப்படுத்தி னார். இதேவேளை, இன்று நடைபெறவு ள்ள கூட்டத்தில் கட்சியால் முக்கிய தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறி னார்.

இந்தநிலையில் தான், தனிப்பட்ட விடயமாக கொழும்பு செல்லவுள்ளதால் இன்றைய கூட்டத்தி லும் தம்மால் பங்கேற்க முடியாது எனவும் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த மாதமளவில் குறித்த கூட்டம் நடத்தப்படுமாயின் அதில் தம்மால் கலந்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (மு-11)


## வீடு, காணி விலைக்கு தேவை

தேவைப்படும் இடங்கள்:-

யாழ்.நகரில் இருந்து கச்சேரி, நல்லூர், கோண்டாவில், கொக்குவில் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 2 தொடக்கம் 5 பரப்புக்குள் தேவை. C-9371)

தொடர்புகளுக்கு: 077 361 1282

## கார் வாடகைக்கு



திருமண வைபவங்களுக்கான சேவைகளும் ஏற்கப்படும்

தொடர்புகளுக்கு:-
0771853748
0771523899
0710319219

## கார், வான் வாடகைக்கு
Van and Car

விசேட சலுகைகளுடன் வாடகைக்கு விடப்படும்.
**இல.28, ஐயனார் கோவில் வீதி, வண் மேற்கு, யாழ்ப்பாணம்.**
தொடர்புகளுக்கு:-0710319219 (181)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

புலோலி தெற்கு, புற்றளை தம்பப்பாய் (புற்றளை விளையாட்டு மைதானத்திற்கு முன்) பகுதியில் 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
(சி-9377) 0775981648

## இயந்திரங்கள் விற்பனைக்கு

● இத்தாலி அரிவு பட்டறை, ஜெனரெட்டர் 35KW (இங்கிலாந்து) மரவேலை, இரும்பு வேலை இயந்திரங்கள், அலுமினிய வேலைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
(182) 0776001701

## கார் விற்பனைக்கு

Minor 1 Sri Car விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0771853748, 0771523899/0710319219 (181)


## 1 வருடப் பூர்த்தி நினைவு நாள்



### இ.இராமசாமி
(இதயன் பெருமாள்)

ஆண்டு மறைந்தாலும்
மறைய மறுக்கும்
உங்கள் நினைவுகளுடனும்,
கண்ணீரை நிறுத்த மறுக்கும்
கண்களுடனும் உங்களை
சந்திக்கக் காத்திருக்கும்
உங்கள் குடும்பத்தினர்

**பண்டித்தறை, நெல்லியடி.**


## LONDON METROPOLITAN COLLEGE

♦ யாழ்ப்பாணத்தில் ஆங்கில மொழி கற்பித்தலில் புகழ்பூத்த கல்லூரியில் புதிய Diploma in English பிரிவு ஆரம்பம்!

♦ இந்த 2017 A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பாடநெறி!
♦ A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு 3000 விசேட கட்டணக் கழிவு!
♦ இணையும் மாணவர்கள் அனைவருக்கும் Certificate in Spoken English, Certificate in MS office 50% கட்டண கழிவுடன் கற்க முடியும்.

### Diploma in English

காலம்: 04 மாதங்கள் புதிய பிரிவு ஆரம்பம்
*Week end 02.09.2017 10.00 A.M*
*Week days 04/09/2017 10.00 A.M and evening batch 3.00 P.M*
முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை!
யாழ். மண்ணில் ஆங்கில கற்கை நெறி வழிகாட்டலில் கடந்த 7 வருடங்களுக்கு மேல் முன்னிலை.
ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 8 -10 மாணவர் வரை மட்டுமே உள்வாங்கப்படுவர்.
மேலதிக விபரங்களுக்கு மற்றும் பதிவுகளுக்கு 077 136 3389, 076 419 0327 (சி-9373)

Address : London metropolitan college
No. 136, Palaly Road, Parameswara Junction, Jaffna.
ph.Number : 021 753 8395


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## வெற்றிவேலு பிரசாந்தி

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
க.பொ.த உயர்தரம் கணிதப் பிரிவு-2015)



**தாயின் மடியில்:-31.12.1996**
**நோயின் பிடியில்:-31.08.2016**

ஆண்மொன்று
ஆனபோதும்
உனை இழந்தசோகம்
ஆறவில்லை
எங்கள் வீட்டின்
செல்வ மகளே
எமைவிட்டு
எங்கே தூரதேசம்
போனாய்?

கல்விதனில் நீ உயர்ந்து
பார் போற்ற வாழ்ந்திடுவாய்
என்றே பெற்றவர் நாம்
எதிர்பார்த்திருக்க
பாதியிலே உனதுயிரை
கொடியே நோய்வந்து
கொண்டு போனதுவே!

புன்னகை தவழும் உந்தன் பூ முகத்தை
இனி எங்கு நாம் காண்போம்?
அம்மாச்சிக்குட்டி என்று
செல்லமாய் சிணுங்கிடும் உன் பேச்சை
எப்போது கேட்போம்? எங்கள் கடைக்குட்டி
பிரசாந்திச் செல்லமே
உனைப் பிரிந்து எங்களால்
இருக்க முடியவில்லையம்மா
விதியின் சதியென்று விம்மியழுகின்றோம்

எங்கள் செல்வக்கிளியே
உந்தன் நினைவுகள்
காலமெல்லாம் அழியாது
என்றென்றும் உன் நினைவுகளுடன் நாம்!

**எல்லை ஒழுங்கை, தும்பளை**
**பருத்தித்துறை-021 2056030**

**குடும்பத்தினர்** (C-9374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீவ சமாதியடைய உண்ணாவிரதம்!

ஜீவசமாதி அடைய அனுமதிக்கக் கோரி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளி முருகன், வேலூர் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்.

துறவி ஆடைகளுடன் வேலூர் ஆண்கள் மத்திய சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக இருக்கும் முருகன், சிறைத்துறை தலைவருக்கு, கடந்த மாதம் மனுவொன்றை வேலூர் சிறை அதிகாரிகள் மூலம் அனுப்பியிருந்தார். அம்மனுவில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நிலையில், தனது விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது. சிறை வாழ்க்கையை வெறுப்பதாகவும் ஜீவசமாதி அடைய அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடக்கு-கிழக்கில் புத்தர் குடியேற அமெரிக்கா தடை



(கொழும்பு)

வடக்கு,கிழக்கில் புத்தர் சிலை நிர்மாணிப்பது தொடர்பில் அமெரிக்க அரச திணைக்களம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. அமெரிக்க அரச திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள மத ரீதியான சுதந்திரம் என்ற அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த தேரர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்வதாகவும் அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த குழுக்கள் மற்றும் இராணுவத்தினரால் வடக்கு, கிழக்கில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு ஏகாதிபத்தியக் கொள்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகளினால் தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு சொந்தம் எனவும் பௌத்தர்கள் வாழாத இங்கு புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளதாக அமெரிக்க அரச திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)



## நிதி விடுவிக்கப்படாமை குறித்து பிரதமர் கேள்வி

திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட நிதியை, தெற்கு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்பதற்கு ஏன் பயன்படுத்தவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏன் வழங்கவில்லை என்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினார்.

மொரட்டுவை பகுதிக்கு, நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போது, அரசாங்க அதிகாரிகள் சிலரை சந்தித்த போதே, அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். (இ-7)

## டிப்பர் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

6 ஆம் பக்கம் பார்க்க...



நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து இரண்டு வருடங்களை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் மாலை கொழும்பு வைத்தியசாலை லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்றது.

## தான்வைத்த பொறியில் சிக்கிய நபர் உயிரிழப்பு

வெத்தகல பகுதியில், வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக பொறி துப்பாக்கியொன்றை வைத்திருந்த நபர், அதே பொறி துப்பாக்கி சுட்டதன் காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

படுகாயங்களுக்கு உள்ளான நபர், பிரதேச வாசிகளினால் கெபெதி கொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மொரகொடையை வசிப்பிடமாகக் கொண்ட லியோனல் ராஜபக்ஷ (வயது- 39) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே, இதன் போது உயிரிழந்துள்ளார். (இ-7)

## ஜெனிவா தீர்மானமே மிகப் பெரிய சவால்

### -திலக் மாரப்பன-

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானமே வெளிவிவகார அமைச்சுக்குள்ள மிகப்பெரிய சவால் என்று புதிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார். புதிய வெளிவிவகார அமைச்சராக தனது கடமைகளை நேற்று முன்தினம்பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## மாணவர்கள் போராட்டம்

பேராதனை பல்கலைக் கழகத்தின் சுகாதார விஞ்ஞான பீட மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை சுகாதார அமைச்சுக்கு முன்னால் மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (இ-7)

## தாக்குதலுக்கு இலங்கை கண்டனம்

ஸ்பெய்ன், பார்சிலோனாவில், ஆயுததாரிகளால் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குலில் 13 பேர் கொல்லப்பட்டு 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவத்துக்கு, வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இலங்கை அரசாங்கம் சார்பில் இரங்கல் தெரிவிப்பதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளரான மஹேஷினி கொலன்னே, தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ளார். (இ-7)

## பந்துலவிடம் 25ஆம் திகதி விசாரணை

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுப் பிரிவு எதிர்வரும் 25 ஆம் திகதி தன்னிடம் விசாரணை நடத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார். லொத்தர் சபை விவகாரம் தொடர்பிலேயே தன்னிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு கடந்த திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவிடம் விசாரணை நடத்தவுள்ளதாக அறிவித்திருந்தது. அது தொடர்பில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## 'ஊழலில் ஈடுபட்டோரின் குடியுரிமை ரத்து செய்யப்பட வேண்டும்'-ரஞ்சன்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் உள்ளிட்ட ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருந்த அனைத்து நபர்களின் குடியுரிமையும் இரத்து செய்வதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும், மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, அவரது சொந்த அரசாங்கத்திலிருந்த அமைச்சர்களின் குடியுரிமையை இரத்துசெய்தமையை உதாரணமாகக் கொண்டு, இந்த நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## பதவி உயர்வு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 8 பேர் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதற்காக பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

## சு.க.கூட்டம் ஒத்திவைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு பொதுக் கூட்டம் ஒருநாள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி நடத்தப்படவிருந்தது.

எனினும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 2 ஆம் திகதி முடிவடையும் காரணத்தினால் கட்சியின் பொதுக்கூட்டம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்யும் தரப்பினருக்கு கூட்டத்தை 3 ஆம் திகதி நடத்துமாறு கட்சியின் தலைவரும் நாட்டின் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். (இ-7)

## நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் சேவை செய்ய முன்வர வேண்டும்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)

அரசாங்க சேவையில் ஏதேனும் ஒரு துறை மக்களின் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளானால் அது தொடர்பில் அத்துறைகளின் தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். தமது மனச்சாட்சிக்கு ஏற்ப நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் சேவைசெய்யும் அனைத்து அதிகாரிகளுக்காகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் சார்பாக இருக்கும் என்றும் ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார்.

மகாவலி குடியேற்ற வாசிகளுக்கு ஒரு இலட்சம் காணி உறுதிகள் வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விக்டோரியா மற்றும் கொத்மலை வலய விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் திகன மத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (இ-7)

## தேர்தலை இலக்கு வைத்து வாகன விலை குறைப்பு

### டளஸ் விசனம்

(கொழும்பு)

தேர்தலை இலக்கு வைத்து வாகன விலைகள் குறைக்கப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் விலைகள் குறைக்கப்படுவதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பானது தேர்தலுக்கான அறிகுறியாகவே கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.



கொழும்பு பத்திரிகை ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## கணக்காய்வு ஆணைக்குழு செயற்பாடின்றி முடக்கம்

19 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட கணக்காய்வு ஆணைக்குழு இது வரை செயற்பாடுகள் இன்றி முடக்கப்பட்ட நிலையில் இருப்பதாக விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு சட்டமூலம் சில திருத்தங்களுக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இரண்டு வருடங்களாக நாடாளுமன்ற அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 19 ஆம் திருத்தச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட கணக்காய்வு ஆணைக் குழுவானது சுயாதீன ஆணைக்குழுவாக இயங்க முடியாத நிலையில் முடக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜயசுந்தர தெரிவித்துள்ளார். (இ-7)

## நான் இராஜினாமா செய்யமாட்டேன்

### விஜயதாஸ அறிவிப்பு

எந்தவித அழுத்தங்கள் வந்தாலும் அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப் போவதில்லை என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் பஸ்நாயக்கவின் புதல்வியின் திருமண நிகழ்வு கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்குச் சென்றிருந்த அமைச்சர் விஜயதாஸவிடம் நல்லாட்சி அரசின் அமைச்சரவையின் செயலாளர் உள்ளிட்டவர்கள் நெருக்கடி நிலை குறித்து அளவளாவியுள்ளனர்.

இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளதுடன் அரசாங்கம் ஒரு முடிபுக்கு வரும் வரை தாம் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கப்போவதில்லை என்றும் பதலளித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## கந்தையா வைரவநாதன்

முத்துலிங்கம் என அன்பாக அழைக்கப்படும் க.வைரவநாதன் 16.08.2017 புதன்கிழமை தனது பூதவுடலை விட்டு நீங்கினார்.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் நா.வ.கந்தையா அன் சன்ஸ் உரிமையாளரும் (தற்காலிக தொழில் முகவரி 959, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு நல்லூர் யாழ்.)

காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அன்னபூரணம், அன்னலட்சுமி, நாகம்மா, செல்வரத்தினம், அமிர்தலிங்கம், நாகரத்தினம், தியாகலிங்கம், ஜம்புலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை இல.19, சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.19, சந்திரசேகர பிள்ளையார்
கோயில் வீதி, நல்லூர் வடக்கு

(172)

தகவல்:
குடும்பத்தினர்



## திருமதி குணராஜா பரமேஸ்வரி

தாளையடி திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட குணராஜா பரமேஸ்வரி நேற்று (19.08.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சுந்தரம் குணராஜாவின் அன்பு மனைவியும் அமரர் செல்லையா பாக்கியம் தம்பதியரின் மகளும் அமரர் சுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும் மகாலக்சுமியின் சகோதரியும் நவரத்தினம், நீலாயதாட்சி, றாஜேஸ்வரி, சோதிமலர், சரோஜினிதேவி, சத்தியதேவி ஆகியோரின் மைத்துனியும் ரவீந்திரராசன், சீதாராணி (ஜேர்மன்), வசுந்திராதேவி (யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம்), வள்ளுவன் (நோர்வே), வாசுகி (யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி), செங்குட்டுவன் (கிறீன் விஷ்வா லங்கா பாம்), நக்கீரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஆனந்த செந்தூரன் (யாழ்.வைத்தியசாலை - திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாகபூசனி, பரமானந்தன் (ஜேர்மனி), அம்பிகைபாலன், சாஈஸ்வரி (நோர்வே), சுதாகரன், றேமனா, நிரஞ்ஜினி, நளாயினி (யாழ்.இந்துக் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் குந்தவி, மயூரன், மதுமதி, ராம், அபிராமி, சங்கீர்த்தனன், பிரகதீசன், நந்திதா, ஆதித்தியன், சாருகேசன், கவிசாயினி, ஜனனி, சுருதி, கேதாரநாத், லக்ஸ்மிநாத், சாம்பவி, சாயிப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2017) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
021 222 9621, 077 703 3039

(C-9381)

தகவல்:
குடும்பத்தினர்

## சுன்னாகத்தில் விபத்து; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு மேலும் ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் சுன்னாகம் சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் மல்லாகத்தைச் சேர்ந்த சிங்கராசா ஆனந்தராசா (வயது-63) மற்றும் அவரது மகன் ஆனந்தராசா நிறோஜன் (வயது-27) என்ற இருவருமே விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் சுன்னாகப் பொலிஸில் முறையிடப்பட்டதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

## 6ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
01 - 06 - 1952

விண்ணில்
26 - 02 - 2017

## அமரர் சின்னத்துரை இராஜேஸ்வரி

(இராஜேஸ் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்)

பருத்தித்துறை வீதி, குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி சின்னத்துரை இராஜேஸ்வரி 26.02.2017 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (21.08.2017) திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

பருத்தித்துறை வீதி,
குடமியன், வரணி.

(C-9380)

தகவல்: குடும்பத்தினர்
077 322 3033

# மரண அறிவித்தல்

## திருமாள் மகேந்திரன்

(சிரேஷ்ட நிதி ஆலோசகர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)



கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமாள் மகேந்திரன் 18.08.2017 அன்று அகால மரணமானார்.

அன்னார் திருமாள் - தெய்வானை தம்பதியரின் பாசமிகு மகனும் பாலசிங்கம் - ஜனகி தம்பதியரின் மருமகனும் பாமினியின் கணவரும் பாகினியான், பாவின்பன், லேகின்யன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகராசா, இராமகிருஸ்ணன், அனுசலாதேவி, வீரநாகு, சகாதேவன் (GTZ உத்தியோகத்தர்), நாகநந்தினி, இராமச்சந்திரன், பாலச்சந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லமாகிய அண்ணாசிலையடி ஸ்கந்தபுரம் என்ற முகவரியில் நடைபெற்று பூதவுடல் ஸ்கந்தபுரம் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-9379)

தகவல்- சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER

யாழ் FIESTA

ஓர் அற்புதமான அனுபவம்

# புத்தம் புதிய பொருட்களுக்கு

# 50% வரை

# கழிவு

## ஆகஸ்ட்

## 25 26 27

**உலகத் தரம்வாய்ந்த வர்த்தக நாமங்களின் வீட்டுப்பாவனைப் பொருட்கள்**

**ஒரே கூரையின் கீழ் நம்பமுடியா விசேட விலைக் கழிவுடனும் சலுகைகளுடனும்**

காலை 09.30 - இரவு 09.00 வரை

நுழைவு இலவசம்

## யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

(அ-9367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் கலாசாரப் பேரவையின் 2017 ஆம் ஆண்டுக்குரிய கூட்டம்

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 2017 ஆம் ஆண்டுக்குரிய பொதுக்கூட்டம் 26.08.2017 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய திருமதி.எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து நல்லூர் பிரதேச கலைஞர்களையும் தவறாது அக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (இ

## சைவ மகாசபையின் பொதுக் கூட்டம்

வடமராட்சிக் கிழக்கு சைவ மகாசபையின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதங்கேணி கந்தகாடு கோவில் மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் விருந்தினர்களாக சைவ மகா சபை பொதுச் செயலாளர் வைத்தியர் ப. நந்தகுமாரும் , மறவன் புலவு க. சச்சிதானந்தனும் கலந்து கொள்வர். (இ-60)

# இன்று நடைபெறும் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடக்கிலிருந்து 20481 மாணவர்கள் தோற்றுகின்றனர்

### கல்வியமைச்சின் செயலாளர் இரவீந்திரன் வாழ்த்து

இன்றைய தினம் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் வட மாகாணத்தைச் சேர்ந்த 20 481 மாணவச் செல்வங்களுக்கும் முயற்சி உயர்ச்சி தரும் தன் மெய்வருந்தக் கூலி தரும் என்பதற்கிணங்க நடைபெறவிருக்கின்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பான மதிப்பெண்களைப் பெற்று உங்களுடைய பெற்றோருக்கும், கல்வியறிவு புகட்டிய ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் மற்றும் வட மாகாணத்திற்கும் பெருமை சேர்த்து கல்வியுலகில் புகழ் பூத்து நிற்க! எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் குறிப்பிட்டுள்ளார். (இ

# டிப்பர் மோதி குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி!

## நேற்றுக்காலை சாவகச்சேரியில் துயரச்சம்பவம்






ஏ- 9பிரதான வீதியில் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு முன்பு இடம்பெற்ற விபத் தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் சாவகச்சேரி சந்தைக்கு சைக்கிளில் தேங்காய் மூட்டையொன்றை கட்டிய படி குறித்த குடும்பஸ்தர் சென்று கொண்டிருந்தார். இதன்போது சந்தைக்கு அண்மித்ததாக நீதிமன்றத்துக்கு முன்பாக டிப்பர் வாகனம் மோதியுள்ளது. இதனால் சைக்கிளோடு தூக்கி வீசப்பட்டு தலையில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே குடும்பஸ்தர் பலியாகியுள்ளார். மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த 56 வயதான கதிர்காமு சிவராசா என்பவரே பலியாகியுள்ளார். சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு விசாரணைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-89)

# மரண அறிவித்தல்

## அமரர். கந்தையா மயில்வாகனம்



மண்ணில்:1934.06.18
விண்ணில்:2017.08.17

புத்தூர் கிழக்கு காளியானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு விவசாய சம்மேளனத்தினதும் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தின் பொருளாளரும் ஆகிய கந்தையா மயில்வாகனம் 17.08.2017 வியாழன் அன்று காலமாகி விட்டார்.

அன்னார் கந்தையா செல்லம்மா அவர்களின் அன்பு மகனும் அன்னபாக்கியம் அவர்களின் அன்புக் கணவனும் ராசம்மா அவர்களின் அன்புச் சகோதரனும் ஜெயசீலன், ஞானசீலன் (பிரான்ஸ்),தேவகி,ஞானகி (London), கண்ணகி (கனடா), அவர்களின் அன்புத் தந்தையாரும் சகாயமணி, சோபிதா (பிரான்ஸ்), முரளிதரன், சிவகுமார் (London) அவர்களின் அன்பு மாமனாரும் சசிக்குமார், நிரோஜினி, நிதுஷாயினி, பவிஸ்கா, கேசிகா, ரக்சிகா, கினோஸ், நிலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக புத்தூர் கிழக்கு அந்திராணை இந்து மயானத்திற்கு 20.08.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை 10.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
காளியானை. (165) தகவல்: குடும்பத்தினர்.

# போதையில் சாரதி ரூ.9000 அபராதம்

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 9 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ. யூட்சன் 3 மாத காலம் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் இரத்து செய்து உத்தரவிட்டார்.

கடந்த 6 ஆம் திகதி பண்டத்தரிப்பில் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமைக்காக இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 10 ஆம் திகதி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போது சாரதி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப்பத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக 9 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து 3 மாத காலம் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து நீதவான் உத்தரவிட்டார். (இ-10-104)


## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிச வாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டு தல் (வயிறு/மார்பு/கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு -Shan's Health Care
255,K.K.S,Rd,Kokuvil
T.P- 077 035 7307 (176)

## தேவை

Wijitha Trading & Investment (Pvt) Ltd
Kilinochchi

எமது நிறுவனத்திற்கு தளபாட பொருட்கள் விற்பனைக்கு பட்டா ரக வாகனங்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
❖கிளிநொச்சி - 077 700 3427,
❖யாழ்ப்பாணம் - 072 502 9966
❖வவுனியா - 077 848 5389

கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி (கி- 9375) T.P: 011 432 0232
011 406 2830


# 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்.செல்வி.

## மங்கையர்க்கரசி பொன்னம்பலம் (மங்கை)



மலர்வு
குப்பிளானில்
1978 - 08 - 23

உதிர்வு
லண்டனில்
2003 - 08 - 20

ஆண்டுகள் ஓடி மறைந்ததம்மா—உன்
அழகிய முகம் மறைந்திடுமா?
வாழ்வினை எமக்கு புரியவைத்தாய்—நீ
மீழா துயில்தனில் ஆழ்ந்துவிட்டாய்!
உன் நினைவுகளை சுமந்தபடி —எம்
வாழ்க்கை ஓடி மறையுதம்மா!
என் இனிய இளைய மகளே!

(152) குப்பிளான் தெற்கு. 077 852 6152

உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும். இதில் பாட்டு- எஸ்.குமாரசாமி, வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- க.கண்ணதாஸ், கடம்- அ.செல்வரெத்தினம், கெஞ்சிரா -ஞா.வசந் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாலவர் மணிமண்டபத்தில் இடம்பெறும். சைவப் புலவர் சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் 'திருவடியின் சிறப்பு' எனும் தலைப்பில் இளஞ்சைவப்புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் க. கைலாநாதன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

# 'நல்லைக்கந்தன் கானங்கள்' இறுவெட்டு வெளியீடு இன்று

நல்லூர் மஹோற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லைக் கந்தன் கானங்கள் இறுவெட்டு வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் யாழ்.கதிர் கலையகப் பணிப்பாளர் உடுவை எஸ்.தில்லை நடராசா தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (இ-3)

# சிறுவர்களின் கல்விவாய்ப்பை நாம் உறுதிப்படுத்துவோம்

நடந்து முடிந்த யுத்தத்தினால் ஏற்பட்ட வீளைவுகள் எமது சமூகத்தில் சிறுவர்கள், பெண்களை வெகுவாகவே பாதித்துள்ளது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உழைக்கும் திறனை இழந்த குடும்பத்தலைவர்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் என்று பல்லாயிரம் குடும்பங்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான ஏக்கங்களுடன், விரக்தியுடன் வாழ்கிறார்கள்.

இலவச கல்வி வாய்ப்புக்கள் எமது நாட்டில் உள்ளபோதும் கல்விக்கான மேலதிக தேவைகள் உள்ளமை வெளிப்படையானதே. சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் 1997 முதல் சிறுவர்களது கல்வி மேம்பாட்டுக்காகவும் இறுதி யுத்தத்தின் பின்னர் துயரங்களுடன் வாழ்கின்ற பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் செயற்பட்டு வருகிறது.

எமது நிறுவனம் இது வரை 700 வரையான சிறுவர்களுக்கு கல்விக்கான உத விகளை அவர்களது கல்வி பூர்த்தியடையும் வரை மேற்கொண்டு வருகிறது.

சிறுவர்களது இன்றைய தேவையை நாளை என்று பிற்போட முடியாது. இதனை அவசரமான, அவசியமான பணியாக சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது. சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் எமது மாவட்டத்தில் வாழ்கின்ற நல் இதயங்களிடம் உடனடியாகவே செயலில் இறங்குமாறு கோரிக்கையை முன்வைக்கின்றது. ஒவ்வொருவரும் ஒரு சிறுவனது கல்விக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அந்தச் சிறுவர்களது கல்வி பூர்த்திய டையும் வரை உதவியை வழங்குங்கள்.

உதவி தேவைப்படும் சிறுவர்கள் தொடர்பான விபரங்களை பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்களில் பெறமுடியும். ஒன்றிணைவோம் குறைந்தபட்சம் 1000 சிறுவர்களது கல்விக்கான வாய்ப்பை உறுதிப்படுத்துவோம். மாதாந்தம் ஆகக் குறைந்தது 1000/= வை வழங்குவோம் ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது எம் முன்னோர் வாக்கு.

இது எமது வரலாற்றுக் கடமை நாளை என்று ஒத்தி வைக்க முடியாதது. இன்றே செயலில் இறங்குவோம். சிறுவர்களை ஆற்றல்படுத்தி சமூகத்தை வலுப்படுத்து வோம்.

மேலதிக தகவல்களுக்கு

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,
முகவரி:- 254, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.இல:-021 222 0483/077 723 8686,
மின்னஞ்சல்:-cfcdeve @gmail.com.
இணையதளம்: -cfcdjaffna.
முகநூல்:-cfcdjaffna.

# அருள் நெறி விழா

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ம.பாலகைலாச சர்மா, உடுவில் பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட சாளம்பை அறநெறி பாடசாலை மாணவர்களின் நடனம், சுன்னாகம் கதிரமலைச் சிவன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம், பண்ணிசை, கதாபிரசங்கம், பேச்சு என்பன இடம்பெறும். மேலும், சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஞானஒளி அறநெறிப்பாடசாலை மாணவர் களின் பண்ணிசை, கதாபிரசங்கம், பேச்சு, சிவசக்தி அறநெ றிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு என்பனவும் இடம்பெறும். (இ-3)

# ஆன்மீக அருளுரைகள்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞான யக்ஞம்) இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணிவரை இல.700,பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும். இந்நிகழ்வில் 'எது பலம்' எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

# இசை அர்ச்சனை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மாவின் இசை அர்ச்சனை- சாஸ்திரிய இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம் பெறும். (இ-3)

# தொடர் இசைப் பேருரை

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகாசபை 30 வருடங்களுக்கு மேலான நடத்தி வரும் கம்பராமாயணம் தொடர்பான தெய்வீக தொடர் இசைப் பேருரை (சங்கீத கதாபிரசங்கம்) இன்று மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மணிமண்டபத்தில் இடம் பெறும். 'கும்பகர் ணன் வதம்' எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா இசைப்பேருரை நிகழ்த்துவார். (இ-3)

# ஆன்மீக நிகழ்வுகள்

நல்லூாக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர் கந்த சுவாமி கோவில் முன்பாகவுள்ள செல்லப்பா சுவாமிகள் நினை வாலயத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.பாலகைலாசநாத சர்மாவின் சிறப்புச் சொற்பொழிவும், பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தனின் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவும் இடம்பெறும். (இ-3)



வேல்ட்விசன் நிறுவன அனுசரணையில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் எஸ்.ரி.குமரன் எஸ்.ரிஅருள்குமரன் எழுத்துருவாக்கம் நெறியாள்கையில் நாங்கள் மாறுவோம் என்னும் பொலித்தீன் பாவனையை குறைப்பது தொடர்பான தெரு வெளி ஆற்றுகை கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை வேரம் பகுதியில் இடம்பெற்றது. இத் தெருவெளி ஆற்றுகை நிறைவில் பொலித்தீன் பாவனையை நீக்கும் பொருட்டு துணிப்பைகள் வழங்கப்பட்டன.




## இந்துவாக வாழ்வோம்

ஆடி வா முருகா ஓடி வா முருகா
நாடித் தேடி வந்தோம் நல்லூர்-முருகா
நல்லூர் முருகா ஓடி வருவாய்
ஓடி வருவாய் நல்லூர் முருகா
குன்றிலும் உறைவான் மன்றிலும் இருப்பான்
நினைக்கும் மனதில் நிலைப்பான் முருகன்
பரியிலும் வருவான் தகரிலும் திரிவான்
துதிக்கும் போதில் அருள்வான் முருகன்
(ஆடிவா)

திருமதி சாந்தா வீரசிங்கம்
சின்மயா மிஷன்

## சரவணபவனே சரணம் ஐயா!



தில்லைக் கூத்தன் சிவனின் புதல்வா
நல்லை நகரில் அருளும் முருகா
சித்திரத் தேரேரி வரும் ஆறுமுகா
சிறப்பான வாழ்வதனை அருளும் வேலவா

சித்தர்கள் பலர் உன்னடியில் வாழ்ந்து
சிறந்திட்ட நல்லூரின் நாயகனே முருகா
ஆறுபடை வீடுடைய அழகிய குமரா
ஆனந்தமாய் தேரேரி வந்து அருளுமையா

கு.யசிதீபன்
அரியாலையூர்.

## தேரேறும் நம் முருகா



நல்லூரில் தேரேறும் நம் முருகா
அல்லல்கள் தீரலையே ஏன் முருகா
அழித்திடு உன் வேலால் அகங்காரம்
அனுதினம் நீ வந்தாய் அலங்காரம்
அடியவர் எம் வாழ்வோ அலங்கோலம்
ஆறுபடை வேலவனே உன் அருள் வேண்டும்
எம் வாழ்வுத்தேர் சரியான பாதை செல்ல
நம்பி வடம் பிடிக்கின்றோம் முருகா
நம் வாழ்வில் நல்வழியை நீ காட்டு

புலோலியூர் வேல்நந்தன்.

## நல்லருள் புரிவாய் நல்லைக்கந்தா!



அழகு ரதமேறி அடியார்க்கு அருள்புரிய
ஆறுமுகப்பெருமானார் ஆடிவரும் காட்சி
இதயத்திருந்திடவே இருவினைகள் தானகலும்
ஈடிலாப் பெருமையுடன் நாம் ஈடேற்றம் பெற்றிடலாம்
உளம் நிறைந்த பக்தியும் உள்ளத்தில் நிறைந்திடவே
ஊரெலாம் கூடி ஒற்றுமையாய் வடம்தொட்டு
என்ன தவம் செய்தோமென எம்பெருமானை வேண்டி
ஏதிலாப் பேரன்புடன் ஏற்றமிகக்கொண்டு
ஐயமிலா நல்லருளால் ஐக்கியம் நிலைத்திடவே
ஒன்றுபட்ட மனதோடு ஒப்புயர்வுதான் வேண்டி
ஓங்கார வேலவனை ஓதி உளத்திருத்தி
ஔவைக்கு காட்சி தந்த அழகன் முருகனை
துன்பமெலாம் நீங்கத் துணை நிற்க வேண்டுவமே.

நீர்வைமணி.

## நல்லைக்கந்த சந்தப் "பா"



வீதியூர் வலத் தேரில் வந்திடும்
வெற்றி வேலனை நேரிற் கண்டிடப்
போது மோவிழிப் போது ரண்டுமே
பொங்கும் பேரெழில், கோடி வேண்டுமே
மாதரா ரிரு கரங்கள் பற்றவே
மாம ழையெனக் கருணை பெய்திடும்
ஆதி நாயகா அவனியோர் படும்
அல்லல் நீக்கவா! நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறிவரும் நல்லூர் அலங்கார கந்தன் பாதம் பணிகிறோம்

மக்கள் மனங்கவர் பஞ்சாங்க நாட்காட்டி

கலண்டர் உலகில் No. 1 நாட்காட்டி

யுனிலங்காஸ் தினத்தாள் கலண்டர்

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் : 0776258778

STUDY IN CANADA

THIGUVI WWW.THIGUVI.COM

Regd. No.: J/DS/03/BR/1704/2007

Admission for September 2017

Niagara College Canada | CONESTOGA | ST. CLAIR

Why CANADA?

- Work Permit after graduation
- Permanent residency options
- Earn-While -U - Learn options

Why ICGE?

- Since 1998 – The oldest and largest counseling organization in the sub continent
- Counselors – Not Agents
- On Spot interview
- Complete Guidance – Admission to graduation, Travel and stay arrangements, change of status

Courses offered

Diploma, bachelor and post graduate courses

(+94) 021 2217400
(+94) 021 45 48464

273, Main street, Northern Province, Jaffna, Srilanka
THIGUVI EDUCATION SERVICES

MDP- Srilanka TES

TES STUDY IN CANADA

"Study in Canada... Step up in Life"

PROGRAMS OFFERED
INFORMATION TECHNOLOGY
BUSINESS ADMINISTRATION
HOTEL MANAGEMENT

ST. CLAIR COLLEGE, Canada

ESL OPTIONS
Scholarship Available
Work Permit after Graduation
PR options Available

ST. CLAIR COLLEGE, WINDSOR, ONTARIO



ADMISSION FOR SEPTEMBER
PATHWAY PROGRAM AVAILABLE
SCHOLARSHIP OPPORTUNITY AVAILABLE
AUTHORIZED COUNSELLOR NOT AGENT

Students of ICGE currently studying in Canada commenced in March 2017

TES, 273, Main Street, Northern Province, Jaffna, Srilanka

JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!

WWW.THIGUVI.COM (+94) 0212217400 (+94) 021 45 48464


# சடலம் மீட்பு

வவுனியாவில். வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்த இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞனின் சடலம் நேற்றுக்காலை சமயபுரம் அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள அவரது வீட்டின் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கட்டார் நாட்டிலிருந்து விடுமுறையில் வீட்டிற்கு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டிற்கு வந்த இளைஞன்வழமையை போன்றே வீட்டில் இருந்துள்ளார். எனினும் நேற்று அதிகாலை இளைஞன் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்துள்ளதுடன், இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரை ந்து சடலத்தை மீட்டுள்ளனர். மாரிமுத்து பிரசாந்தன் எனும் 26 வயதுடைய இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

# மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணப் பட்டியல் விநியோகம்

## மக்கள் விசனம்

மன்னாரின் சில பகுதிகளில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாத்திரமே மின் கட்டண பட்டியல் கிடைப்பதால் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை மேற்கு பிரதே சச் செயலாளர் பிரிவிற்கு உட் பட்ட ஆண் டான் குளம், ஆட்காட்டிக்குளம் உள்ளிட்ட சில கிராமங்களில் மின் வாசிப்பாளர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையே வருகை தருகின்றனர். இதனால் எம க்கு பெருந் தொகை பணத்தை ஒரே தடவையில் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

கடந்த காலங்களில் ஒவ்வொரு மாதமும் எமக்கு மின் பட்டியல் கிடைத்து வந்த நிலையில், தற்போது 3 மாதங்களுக்கு ஒரு தடவை மின் பட்டி யல் வழங்கப்படுகிறது. குறிப் பாக கடந்த 16-05-2017 அன்று மின் கட்டண பட்டியல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர் ந்து 14-8-2017 அன்றே மின் கட்டண பட்டியல் வழங்கப்பட்டது.

அதற்கிடையில் 27-07-2017 அன்று ஒரு மின் கட்டண பட்டியல் தொடர்பில் மின்மானி வாசிப்பு மேற்கொண்டது போல் கடைசி யாக 3 மாதங்களின் பின் வழங்கப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதேவேளை, வீடுகளுக்குச் சென்று மின் மானியை பார்க்காது மின் கட்டண பட்டியல் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் கவனம் எடுத்து பிரச்சினையை தீர்த்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# இலவச பரிசோதனை முகாம்

மறைந்த வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் அமரர் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதனின் ஞாபகார்த்தத்தை முன்னிட்டு இலவச மூக்குகண்ணாடிபரிசோதனை முகாம் இன்று காலை 7.30 மணியளவில் முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு கிராம சேவகர்அலுவலகத்தில்நடை பெறும்.

வன்னிக்குறோஸ் சுகாதார நிறுவனத்தின் ஆதரவுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் ஒருங்கமைப்பில் நடத்தப்படும் இந்த முகாமில் இலவச மூக்குக் கண்ணாடி பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கலும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும், இந்த முகாமிற்கான பங்களிப்பினை புலம் பெயர்ந்து வாழும் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியர் சி.தவசீலன் வழங்கவுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது. (8)

# இராசி பலன்

20.08.2017
(ஆவணி 4, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 2.36 மணிவரை
பூசம் மாலை 6.18 மணிவரை
சுபநேரம் 9.05 -10.35 மணிவரை
இராகுகாலம் 4.35 - 16.05 மணிவரை
நல்லூர்க்கந்தன் தேர்,
ஆவணி ஞாயிறு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம்- பூராடம் | | செவ்<br>ராகு,<br>புத, சந் |
| கேது | | | சூரி |
| | சனி | | குரு |

**மேடம்** வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளை பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** புதிய நட்புகள் ஏற்படலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பேச்சில் கனிவு பிறக்கும், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**கடகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, வழிபாட்டில் ஆர் வம் காட்டுவீர்கள், கனிவாக பேசி காரியம் சாதிக்க வேண் டிய நாள்.

**சிம்மம்** திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், ரோக பயமுண்டு, சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற் [illegible]வர்களின் ஒத்து [illegible]க் கிடைக்கும்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, பித்த சம்பந்[illegible]முண்டு.

**தனுசு** சிந்தித்துசெயற்பட்டு சிறப்புக்கள் காண வேண்டிய நாள், திட்டமிட்ட பணிகளில் சிறு தாமதம் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்வார்.

**மகரம்** சொந்த பந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், மனத்திற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், போசன நன்மையுண்டு.

**கும்பம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்கந்தன் இரதோற்சவ சிறப்புமலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AFTER A/L's @ ESOFT

Choose from a range of Diplomas to Master

*Shaping Lives, Creating Futures.*

**ESOFT METRO CAMPUS**



உங்கள் சிறப்பான எதிர்காலத்திற்கான திறன் அபிவிருத்தியை உறுதிசெய்யும்
அகில இலங்கை ரீதியில் பிரசித்தி பெற்ற

## இரட்டை டிப்ளோமாக்கள்

# IT + ENGLISH

**Diploma in Information Technology**
Duration : 4 Months
Course Fee : TEXT BOOK FREE

- MS Office, Hardware & Networking
- Graphics & Animation
- Web Designing
- Software Engineering
- Programming (Java, C#.net) and many more

**Diploma in English**
: 4 Months
: TEXT BOOK FREE

- Grammar
- Spoken
- Comprehension
- Role Play and more

FREE DVD
with Role - Play Videos

முதலாம் டிப்ளோமாவிற்கு **25% கழிவு**
இரண்டாம் டிப்ளோமாவிற்கு **50% கழிவு**

**COMMENCEMENT 05th SEP 2017**

வலுவான Pearson - UK சான்றிதழ்

A/L பெறுபேறுகளுக்கு முன்னர் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்

Pearson BTEC
*Recognised More than 100 Countries*

# DEGREES @ ESOFT

HND IN BUSINESS SPECIALISING IN

- **HND in** Computing & Systems Development
- **HND in** Business Management
- **HND in** Accounting & Finance
- **HND in** Marketing
- **HND in** Quantity Surveying

Duration: 18 months

Installments Plans available *Conditions Apply

Equivalent to the 1st & 2nd Year of a UK Honours Degree

**UGC APPROVED**

FREE FOR ALL REGISTRATIONS

**NEW INTAKE SEPTEMBER**

Pearson Annual Awards GOLD PARTNER 2015

LONDON METROPOLITAN UNIVERSITY · Kingston University London · Pearson · bcs Accredited Course Provider · Microsoft IT Academy Program Member · ORACLE ACADEMY · intel

# ESOFT METRO CAMPUS

*Shaping Lives, Creating Futures.*

NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 **Hotline : 077 309 9 308**

Follow us on

*Sri Lanka's Largest Private Sector Higher Education Network*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் இரதோற்சவ

சிறப்புமலர் - 20.08.2017












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 6.00p.m - 9.00p.m



NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை

KL KIRUBA LEARNERS

# KIRUBA LEARNERS

Government Approved Driving Trainning School

## கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5292

**யாழ்ப்பாணம் :**

- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201 071 454 6958
- விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. 021 300 6550 071 454 6957
- இல. 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (மதவடி அண்மையில்) 021 224 2022 071 454 6956
- கண்டி வீதி, சாவகச்சேரி. (பேருந்து நிலையம் அண்மையில்) 021 492 3202 021 227 0700

**கிளிநொச்சி :**

- A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505 071 454 6955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515 071 454 6955
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818 071 454 6955
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544 071 454 6955

**மன்னார் :**

இல. 94, பிரதான வீதி, மன்னார். 071 988 7699 077 847 2732

**வவுனியா :**

216, A9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்) 021 222 7777 071 454 6953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017




வட இலங்கையில் புகழ் பூத்த முன்னணி ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரியான

## ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியில்

புதிய ஆங்கி டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

### இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

### DIPLOMA IN ENGLISH LANGUAGE (6 MONTHS)

வட இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கற்றுவரும் முதற்தர, ஆங்கில மொழிக்கென்றே தனித்துவமாக நடத்தப்படும் கல்லூரியில் இணைந்து கற்பதன் மூலம் ஆங்கில மொழியைக் கற்று சரளமாக பேச ஓர் அரிய வாய்ப்பு!!!

### யார் இந்தப் பாடநெறியில் இணைய முடியும்?

- 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்
- O/L, A/L பரீட்சைகளை எழுதி பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள்
  பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள், படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் உயர் கல்லூரி மாணவர்கள்.
- வெளிநாட்டில் வேலை புரிய செல்பவர்கள், பட்டப்படிப்பை தொடர இருப்பவர்கள்.
  அலுவலகங்களில் பணிபுரிவோர்
- குடும்பப் பெண்கள்
- ஆங்கில ஆசிரியராக வர விரும்புவர்கள்
- ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் மற்றும் சர்வதேச சான்றிதழ்களைப் பெற விரும்புபவர்கள்.



### எமது டிப்ளோமா ஆங்கிலப் பாடநெறியின் சிறப்பம்சங்கள்

- எம்மிடம் இணையும் அனைவரும் ஆங்கில மொழியில் புலமை பெற்று நிச்சயமாக ஆங்கிலத்தில் சரளமாக கதைக்க முடியும் என்ற உத்தரவாதம்.
- இரண்டு கட்டங்களை உள்ளடக்கிய இந்தப் பாடநெறியில், மாணவர்கள் அடிப்படையில் இருந்து ஆங்கில மொழியைக் கற்று படிப்படியாக முன்னேறி ஆங்கிலத்தில் கடினமான பகுதிவரை கற்று மொழியில் சிறந்த தேர்ச்சி அடைவதுடன் ஆங்கில மொழியினை சரளமாகவும், லாவகமாகவும் பேசுவர்.
- கட்டம் ஒன்றில் (LEVEL 1) மாணவர்கள் ஆங்கில மொழியில் சகல கட்டமைப்புகளையும் கற்பதுடன், தாம் நினைப்பதை வசனம் வசனமாக பேசும் நிலையை அடைவர்.
- கட்டம் இரண்டில் (LEVEL 2) மாணவர்கள் தாம் உருவாக்கிய வசனங்களை பந்தி பந்தியாகப் பேசுவர்.
- மொழியின் திறன்களான கேட்டல் (LISTENING), பேசுதல் (SPEAKING), வாசித்தல் (READING), எழுதுதல் (WRITING) என அனைத்துத் திறன்களும் கற்பிக்கப்பட்டு ஒரு மொழியில் இயல், இசை, நாடகம் என்ற பாங்கிற்கு அமைவாக அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி மிக்க மாணவர்களாக உருவாக்கப்படுவர்.
- இப் பாடநெறியைப் பயின்றவர்கள் ஆங்கில மொழியில் சரியான உச்சரிப்பு மற்றும் மொழியில் புலமை பெறுவதுடன் சரளமாகவும் பேசுவர்.
- ஆங்கிலத்தில் எந்தவிதமான நேர்முகத் தேர்வுகள், பரீட்சைகள், மேடைப்பேச்சு, Presentation, கடிதங்கள், கட்டுரைகள் எழுதுதல், கற்பித்தல் என அனைத்திலும் சிறந்த தேர்ச்சி பெற முடியும்.
- பயிற்சிநெறி முடிவில் ஆங்கில டிப்ளோமா சான்றிதழைப் பெறுவதுடன் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களான UNIVERSITY OF CAMBRIDGE CITY & GUILDS(UK) போன்ற நிறுவனங்களின் சர்வதேச சான்றிதழ்களையும் பெற முடியும்.

### E-CITY கல்லூரியின் ஏனைய பாட நெறிகள்

IELTS (INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM)

**வெளிநாடுகளில் உயர்கல்வி தொழில் வாய்ப்பு மற்றும் குடியேற விரும்புவர்கள் சித்தியடைய வேண்டிய பரீட்சையாகும்.**

ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியானது உயர்ந்த சித்தி வீதங்களை வழங்கி வருவதுடன் BRITISH COUNCIL இன் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவும் உத்தியோகபூர்வ பரீட்சை பதிவுப் பிரதிநிதியாகவும் இருக்கிறது.

E-CITY IS AN OFFICIAL IELTS REGISTRATION CENTRE FOR BRITISH COUNCIL

### IELTS LIFE SKILLS A1/B1

- U.K நாட்டவரை திருமணம் புரிந்தவர்கள் கணவன்/மனைவி (SPOUSE VISA)
  விசாவில் U.K செல்வதற்கான ஆங்கில பரீட்சையாகும்.
- இலகுவான முறையில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு 100 வீதம் சித்தியடைய உத்தரவாதம்
- வட இலங்கையில் அதிக மாணவர்களைப் பயிற்றுவித்து 100 % சித்திகளை பெற்றுக் கொடுக்கும் ஒரே கல்லூரி

### DIPLOMA IN SINHALA LANGUAGE

குறுகிய காலத்தில் மாணவர்கள் சிங்கள மொழியினைப் பயின்று எழுத வாசிக்கப் பழகுவதுடன் சரளமாக சிங்கள மொழியினைப் பேசும் பாட நெறியாகும்.

**ஆரம்பம் 02.09.2017 காலை 8.00 மணி**

### E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMEMT

இல. 372 D, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)

Website: www.ecitycollege.lk
Facebook: E-City College of English
EMAIL: ecitycollege@gmail.com
Tel: 0212217106 / 0770610271 / 0773400418/ 0774924166



## இப்போது யாழ்ப்பாணத்திலும் சுன்னாகத்திலும் உங்கள்...

# NORTHERN Fitness Gym & Fitness Center




### யாழ். உடற்பயிற்சி ஜிம்மிற்கு உங்களை வரவேற்கின்றோம்...

யாழ். நகரில் முதன் முறையாக NVQ Level 4 உடற்பயிற்சி கற்கை நெறி பயின்ற பயிற்றுவிப்பாளரினால் நடாத்தப்படும் உடற்பயிற்சி நிலையம்.

அதி உயர் செயற்றிறன் கொண்ட பயிற்சிகள் முதன் முறையாக யாழ்.நகரில் உடல் எடை குறைத்தல் உடல் எடை அதிகரிப்பதற்கான விஷேட பயிற்சிகள்.

நீங்கள் விரும்பியவாறு கவர்ச்சிகரமான சிறந்த உடலமைப்பை பெற்றுக் கொள்ள நாம் உத்தரவாதம் அளிக்கின்றோம்.

- முற்றிலும் அமெரிக்காவின் நவீன ரக உடற்பயிற்சி இயந்திரங்கள்.



even if You have conditions like diabetes, cholestrol or thyroid issue we will conduct a blood test and design a specific training programme that will suit your specific body type

come and boost your testosterone level

- உடலின் கொழுப்பின் செறிவினைத் குறைத்தல் (Body Fat Calculations)
- உடற்கட்டுமான உடற்பயிற்சி செயற்பாடுகள் (Body Building)
- வயிறு குறைத்தல் அடிவயிறு சார்ந்த கூட்டு செயற்பாடுகள்(Six Pack) ஞாயிற்றுக்கிழமைகளில் விசேட பயிற்சிகள்

உங்கள் வயது, நிறை, உயரம், உடற் கொழுப்பின் விகிதாசாரத்தையும் கருத்தில் கொண்டு உங்கள் உடற் கட்டுமானம் கணக்கெடுக்கப்படும்.

- உடல் தொகுதி ஒவ்வொன்றினதும் தொழிற்பாட்டிற்கான மதிப்பீடுகள்
- நீரிழிவு, கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள் போன்ற பல நோய்களை தவிர்ப்பதற்கான விஷேட உடற்பயிற்சி செயற்றிட்டங்கள்.
- விஷேட கவனிப்புடன் கூடிய தனித்தனியான உடற்பயிற்சி சார்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.
- ஆடை மாற்றிக் கொள்வதற்கான அறை வசதிகள்
- U.S.A அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்படும் விற்றமின் கனியுப்பு அடங்கிய போஷாக்கு பொதிகள் வழங்கப்படும்.
- மாதாந்த அல்லது வருடாந்த தெரிவிற்கான அங்கத்துவ சலுகைகள் வழங்கப்படும்.
- வாகன தரிப்பிட வசதி




பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த கட்டணம். மும்மொழிகளிலும் தேர்ச்சி மிக்க பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்படும். இங்கு சேவை பெற்றுக் கொண்டதன் பின்னர் வாடிக்கையாளர்கள் பாராட்டுக்களை வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.

Telephone - 077 - 0250 339
No. 573, Manipay Road, Oddumadam, Jaffna.
18, Pandithar Manikathiyagarasa Road, Chunnakam.
(Opposite of ... City) E-mail : info@northernfitness.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017






நல்லூரான்
திருவடிக்கு இன்று தேர்




## ஜீவாகாரம்

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு

## Anna Coffee




*Superbly Blended & Roasted to a Strict Formula....*


எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063



## Northern
### Central Hospital




Other Services


Spirometry / Lung function test
Ultrasound scan
Electrocardiogram (ECG)
Eye Surgeries
Echocardiogram (ECHO)
Ear ,Nose and Throat (ENT)
Exercise Tolerance Test (ETT)
Oral & Maxillofacial Surgery (OMF)
Electroencephalogram (EEG)
Electromygram (EMG)
Uro-surgeries
Sleep Study
Gyn & Obs
Physiotherapy
Fertility Centre
Speech Therapy
Dental and ENT Clinic
Digital X-ray
Eye Clinic

EYE CARE CENTER



**Northern** Central Hospital
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263
E-mail: nchjaffna@gmail.com
Website: www.nchjaffna.com

Northern Eye Care
518, Hospital Road, Jaffna.
T.P: 021 222 3720




## வீனஸ் என்ரப்பிறைசஸ்
## Venus Enterprises

☆ All RO Domestice
☆ Softener Plant
☆ Iron Remover Plant
☆ Mineral water Plant
☆ Panel board
☆ Ozonator
☆ UV. Power box




VENUS AQUA
RO SYSTEMS

Venusroslk@gmail.com

**No.110 Manipay Road, Jaffna.** **Office : 0212217744**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர் - 20.08.2017




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இல்லங்கள், அலுவலகங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள் போன்ற அனைத்திற்கும் அதி உயர் தரத்திலான பாதுகாப்பினை வழங்கும் அனைத்து தொழில்நுட்பங்களும் ஒரே இடத்தில்

Technology at the Speed of Life
**arun**
Software Developers

Mobile Phone Software Repairing / Unlock

சகலவிதமான கையடக்க தொலைபேசிகளின்
உதிரிப்பாகங்களை மிகக்குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.



CCTV camera

அதிஉயர் கண்காணிப்பு கமராக்கள்
மிகக் குறைந்த விலையில் 2 வருட உத்தர
வாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



Hikvisson / Hivisson

உலகத்தரம் வாய்ந்த கண்காணிப்பு
கமராக்கள்.




PTZ Camera



அனைத்து விதமான வாகனங்களுக்குரிய
Player / Cameras / LED TV
களும் எம்மிடமுண்டு.








**தொழில்நுட்பம் சம்பந்தமான
அனைத்து தேவைகளும்
ஒரே இடத்தில்...**

**இல.273, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமையில்)**

I.A.ARUN T.P: 077 712 3313 / 021 221 5828


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017




STUDIO MAYU JAFFNA
HIGH QUALITY PHOTOGRAPHY
CINESTYLE VIDEOGRAPHY

## STUDIO MAYU

சித்திரத்தேர் எழில் பாரீர் – எங்கள்
நல்லைக்கந்தன் தரிசனம் பாரீர்

Today's our creation-Tomorrow's best memories








41 Rakka Road.Jaffna. For Booking Contact +94771552006 , 94770733477

## YOGIS BEAUTY





INSTITUTE OF BEAUTY THERAPY, HAIR DRESSING & HOME SCIENCE (Pvt.) Ltd.

25 வருடங்களுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த நிபுணரின் கைவண்ணம். இந்தியாவின் அதி நவீன அழகுக் கலை நுட்பங்களின் வெளிப்பாடு யாழ்ப்பாணத்திலும், மணப்பெண் அலங்காரத்தின் நவீன பரிமாணங்கள்.

75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Amman Road, Nallur,
Jaffna.

021 222 2796
yogisbeauty@gmail.com
077 716 4923
www.yogisbeauty.com



## AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY

TP : 021 205 7455

- சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
- வடக்கு முழுவதற்கும் இலகுவான விநியோக முறை.
- மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.




ஆச்சி (FOOD FACTORY) ஆச்சி
ஹொட் பூட் ரெஸ்ரோரன்ஸ்

கைதடி கிழக்கு, கைதடி. 147, பலாலி வீதி, திருநெல்வேலி.

TP:-021 222 5001


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தாள் சேர்ப்பான் நல்லூரான் தடைகள் நீக்கி!

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

உலகமெலாம் உய்வதற்காய் உயர்ந்த தேரில்
ஓங்கு புகழ் முருகனுமே உலவ வந்தான்.
நலங்களெலாம் நாம் அடையக் கைவேல் ஏந்தி
நானிலமும் அறுமுகத்தால் பார்த்து வந்தான்.
வளங்கள் மிகு நல்லூரில் முருகன் தேரை
வாங்கிக் கண் வழியாக மனத்திற் கொள்ள
நிலங்களெலாம் தலை நிரப்பி பக்தர் நின்றார்
நீநிலமும் வானிலமாய் மாறிப்போச்சாம்.





செந்நிறத்து ஆடைதனை அணிகள் போர்க்க
சேராத பகை ஒடுக்க முருகன் தேரில்
முன்னிறுத்தி அறம் அதனைக் காக்க வந்தான்
முடிந்ததுவாம் அசுரர் தமின் வாழ்வு என்று
எண்ணிறந்த பக்தரெலாம் எழுச்சி பொங்க
இனி எமக்கு இன்பம் தான் என்று சொல்லி
கண் வழிய வாய் நிரம்ப முருக நாமம்
ககனமெலாம் கேட்டிடவே கூவி நின்றார்.

வேல் கையில் விளங்கிடவும் விரும்பி நல்ல
வெண்முத்து நகையோடு தெய்வயானை
சேல் ஒக்கும் கண்கொண்ட வள்ளி தானும்
சேர்ந்து வலம் வந்திடவும் பக்தரெல்லாம்
மால் கெட்டு மனமெல்லாம் தெய்வச் சாயல்
மாண்புடனே திகழ்ந்திடவே மகிழ்ந்து தங்கள்
வாழ்வொத்து தேவர்களும் வாழார் என்றே
வரமொத்த மானுடத்தை வணங்கி நிற்பார்.

தேன் ஒத்த முருகன் அவன் செம்மை நாமம்
தினம் ஒத்து பஜனை செயும் அன்பரெல்லாம்
பூண் ஒத்த முலை நிகர்த்த வள்ளி தெய்வ
பூவையரை நினைந்து மனம் உருகப்பாடி
வான் ஒத்து நிலம் சிறக்க வணங்கி நிற்பார்
வழி ஒத்து அருணகிரி பாடலெல்லாம்
மாண் ஒத்த சுருதியொடு தாளம் சேர
மனம் உருகிப் பாடிடுவார் தேவர் நாண

வீதியெலாம் தம் உடலப் போர்வை போர்த்து
வீரமிகு இளைஞரெலாம் விறலே பொங்க
ஆதி சிவன் மைந்தனவன் பெயரைச் சொல்லி
ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தே நிற்பார்
நாதி இவன் தாளென்றே நாளும் நல்ல
நங்கையர்கள் அடி அளந்து நாமம் சொல்லி
சோதிமிகு தம் தாலி சுடரக் கேட்டு
சுற்றிவரும் அழகதனை என்னவென்பேன்?

மேளமொடு நாயனமும் இசையைக் கொட்ட
மேதினியும் அதிர்ந்திடவே நாதம் மிக்க
ஆழமிகு மணியோசை அகிலம் கேட்க
அற்புதமாய்த் தோளேறி ஆடி ஆடி
வேலனவன் கோபுரத்தைத் தாண்டி இந்த
வியன் உலகின் துயரமெலாம் அறுப்பன் என்றே
தாளதனைச் சேர்ந்த தனதடியர்க்கெல்லாம்
தஞ்சமதைத் தந்தருளித் தேரைச் சேர்வான்.

பகைத்தலையைச் சிதறடிக்கும் வேலன் போல
பக்தரெலாம் தேர் முன்னே குவிந்து நின்று
மிகைத்து நிலம் மறைத்திடவே மேரு ஒத்து
மேதினியில் குவிந்திருக்கும் தேங்காயெல்லாம்
தகைத்து நிலம் அதிர்ந்திடவே சிதற வீசி
தம்மகத்தின் பக்திவெறி காட்டி நிற்பார்
திகைத்திதனைக் காணுகிற பாலரெல்லாம்
தெருண்டு விழி சுழன்றிடவே தேம்பி நிற்பார்.

தேர் வடத்தைப் பிடித்திழுக்கும் இளையர் கூட்டம்
தேவரெனத் தமை நினைந்து முருகன் போரில்
ஆர் முதன்மை இடம்பிடிப்போம் என்று முந்தி
ஆர்த்ததனை விழி பிதுங்க அசைத்து நிற்கும்
பேர்த்து ரதம் இழுக்கின்ற அவர்கள் தம்மால்
பிறழ்ந்து ரதம் நகராது நெறிகள் செய்து
போர்த்தலைமை கொள்வார் போல் சறுக்குக் கட்டை
போடுபவர் அசையாது வழிகள் செய்வார்

தேர் அசையத் தம் வாழ்வு திகழ்ந்ததென்றே
தேம்பி அழும் அடியரெலாம் 'முருக' என்று
ஊர் அசையக் கூவிடுவார் உணர்வு விஞ்ச
உலகமதை மறந்திடுவார் உயிருட் சேர்த்து
கார் நிறத்த மாலவனின் மருகன் தன்னை
கண்ணதனால் விழுங்கிடுவார் கைகள் கூப்பி
பார் இதுவே சொர்க்கம் எனப் பகர்ந்து நிற்பார்
பண்போடு முருகன் தாள் பணிந்து நிற்பார்!

பச்சை நிறப்பட்டாடை சாத்திப் பின்னே
பளபளக்கும் நகைகளுடன் வேலும் கொண்டு
இச்சகத்தில் தேர் இருந்து இறங்கிக் கந்தன்
எழுச்சியுடன் வரும் அழகை என்ன சொல்வேன்
நிச்சயமாய் இது தெய்வ உலகமென்றே
நினைப்பதனில் உறுதிகொள நெகிழ்ந்து அன்பர்
இச்சையது தீராது ஏங்கி ஏங்கி
எத்தனையோ கோடி முறை வணங்கி நிற்பார்.

வெள்ளமென அருள் சுரக்கும் வேலன் தன்னின்
விழிக்கருணை காண்பதற்காய் விரிந்து நிற்கும்
கள்ளமிலா அன்பர்தமைக் கந்தன் தானும்
கட்டழகால் மயக்கிடுவான் கைவேல் கொண்டு
உள்ளமதில் பதிந்திருக்கும் வினைகள் எல்லாம்
ஒரு நொடியில் அகற்றி அவர் தம்மை ஈர்த்து
தள்ளரிய பெருவாழ்வைத் தந்து தன்னின்
தாள் சேர்ப்பான் நல்லூரான் தடைகள் நீக்கி.

## தேரோட நம் வினையோடு நல்லூர் பதி

நல்லைநகர் தனில் நற்றடம் புரியும் நர்த்தகா
குறவள்ளி தெய்வயானையுடன் குன்றத்தில் குலவும் குமரா
கந்தபுராண எழுச்சி கண்ட நல்லூர் கந்தா
அருணகிரியார் அகத்துறைந்து கோவில் கொண்ட வேலா

கொடும் அசுரரின் கொடி சாய்த்த முருகா
கொற்றவையாள் மைந்தனாம் நல்லூர் கந்தா
வெவ்வினையை வேரறுக்கும் வேல் முருகா
எம் கொடு வினையை போக்கி அருளும் ஐயனே

தேரோட நம் வினையோடும் நல்லூர் பதியில்
நாடியுனைத் துதிக்கின்றோம் நல்லூர் கந்தா
ஆறுமுகப் பொருளாய் தேரேறி வந்து - எம்
தேசத்து இருளகற்றி எம்மை ஆண்டு கொள்ளும் ஐயனே

**சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்**
**செயலாளர்,**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**

## அயிலோடு மயிலோடு வருவாய்!

அருளோங்கும் நல்லைப் பதிமேவும் முருகா
அயிலோடு மயிலேறி வருவாய்
இருள் நீங்கி வாழ்வில் ஒளியேற்ற வேண்டி
இன்னல்கள் பலதாங்கி வந்தோம்
ஒரு ரூபா கொண்டு உன்நாமம் சொல்ல
உலகிலோர் தலமுண்டோ முருகா
வருகால நேரம் வழுவாமல் கிரியை
மகிழ்வோடு காண்கிறாய் முருகா!

**கவிஞர்-நயினை இராகுலன்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017




## பட்டுப்புடைவைகளின் சோலை

# சீமாட்டி

## புடைவைக்கடல் PVT (LTD)

கல்யாணப் பட்டுச்சாறிகள், குர்தாக்கள், பட்டுவேட்டிகள் (Shining Shirts), பஞ்சாபிகள், இன்னும் சிறுவர், சிறு மியருக்கான ஆடை வகைகள் என அனைத்து றெடிமேட் ரகங்களுக்கும் நாட வேண்டிய ஒரே இடம்.

சீமாட்டி



129, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

TP : 021 222 8564
Fax : 021 222 2102



## அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை



# நியூ நெல்சன் லேணர்ஸ்

# New Nelson Learners

89, Kandy Road, Chundukuli, Jaffna.

T.P : 021 222 4527, 077 358 1916, 077 790 6064
Fax : 021 222 9109

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.





### கிளைகள்

இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி. 021 222 4527, 077 358 1916

பஸ் நிலையம், சுன்னாகம். 077 715 0097, 021 492 3732

பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711, 021 492 3733

காளிகோயில் வீதி, சாவகச்சேரி. 021 492 3114, 077 761 1686

குறிகட்டுவான் வீதி, வங்களாவடி, வேலணை 077 730 6980, 071 454 6940

இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. 021 492 3115, 077 111 3382





# அம்ச மஹால்



அரங்கேற்றம், கூட்டம், ஒன்றுகூடல், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்த நாள் மற்றும் பொது வைபவங்களுக்கும்



- விசாலமான பெரிய மண்டபம்
- சாப்பாட்டு வசதிகள்.
- வாகனம் விடுவதற்கான வசதிகள்.
- வீடுகளுக்கு தேவையான உணவுகள் தயாரித்து ஓடருக்கு கொடுக்கப்படும்.

0777 030 418

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (பிடாரி கோவிலுக்கு [illegible])



# த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

அனைத்து விதமான சாறி வகைகள், பஞ்சாபிகள், குர்தாக்கள், சேட் வகைகள், இன்னும் சிறுவர், சிறுமிகளுக்கான ஆடை வகைகள் என அனைவருக்கும் ஏற்ற சகல விதமான ஆடைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்.



# T.SANGARAPPILLAI & SONS

21, Modern Market Power House Road, Jaffna.

TP : 021 222 9965
MOB : 077 308 6894
Email : sangarappillaiandsons@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத வினை தீர்க்கும் தமிழ்க் கடவுள் முருகனின் தேர்வடம் பிடித்திழுப்போம்!





வட இலங்கையில் பண்டைய வரலாறு கந்தபுராணக் கலாசாரம் மிக்க நல்லூரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் தம் அடியார்களுக்கு அருள் சுரந்து கொண்டிருக்கிறான். நல்லூர்தனில் அலங்காரக் கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் அபிஷேக கந்தனாகவும் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாகவும் கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும் கோவில் கொண்டருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான். நல்லூர் ஆலய கிழக்கு, தெற்கு, வடக்கு வாயில் கோபுரங்கள் சிற்பவேலைகளுடன் அமைக்கப்பட்டு அடியார்களை அருள் சுரந்து வரவேற்கும் வாயிலாகக் காட்சி தருகிறது. உள் வீதி மண்டபங்கள் யாவும் வடிவுற அமைக்கப்பட்டு அழகிய வர்ணம் தீட்டப்பட்டு தெய்வீகமாக ஆலய உள்மண்டபங்கள் சிறப்புடன் காட்சி தருகின்றது.

ஆலயத்தின் கண்டாமணி நாதம், நாளும் கேட்கும், மணி ஓசை அடியவர்களது பக்தியைக் கூட்டிப் பரவசப்படுத்துகின்றது. திருவிழாக் காலம் நல்லூர்க்கோவில் பகுதி எங்கும் இந்திரவிழா போலக் காட்சியளிக்கும். அத்துடன் ஆலய வீதிகள் புனிதம் நிறைந்து காணப்படும். திருவிழாக் காலங்களில் முருகன் அடியார்கள் எல்லா இடங்களிலும் இருந்து விரதம் அனுஷ்டித்து நல்லூர் வந்து முருகப் பெருமானின் திருவருள் பெறுகின்றனர். வெளிநாடுகளில் வாழும் முருகன் அடியார்கள் இங்கு வந்தும் வர முடியாதவர்கள் அங்கிருந்து விரதம் அனுஷ்டித்து முருகன் திருவருள் பெறுகின்றனர்.

பெரியவர்கள், குறிப்பாக இளைஞர்கள் இருபத்தைந்து நாளும் விரதம் இருந்து அதிகாலை வேளை தினம் வந்து அங்கப் பிரதட்டை செய் வதைக் காணலாம். பெண்கள், பெண் பிள்ளைகள் ஆசாலசீலராக பண்பாட்டு உடையுடன் வந்து நேர்த்திக் கடன் செய்வதையும் கற்பூரச் சட்டி ஏந்தி வழிபடுவதையும் காணலாம்.

அனைவருக்கும் முருகப் பெருமான் திருவருள் சுரந்து கொண்டு இருக்கின்றான்.

### ஆலய கொடிச் சீலை வரலாறு

ஒவ்வொரு வருடமும் தலைமுறை, தலைமுறையாக செங்குந்தா மரபில் வந்த சிவஞான முதலியார் அவர்களது பேரன், அவர்களைச் சாந்தோர்களினால் கொடியேற்றத்திற்கு முதல் நாள் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் அவர்களது வீட்டில் இருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள கௌரவ வைரவநாதர்- வல்லிபுரச்சாமி அவர்களால் அமைக்கப்பட்ட கொடித்தேர் மடத்தில் கோவில் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று அழகிய சித்திரத்தேரில் மங்கல வாத்தியங்கள் புடை சூழ அடியார்கள் சகிதம் கொடிச் சீலையானது பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டு ஆலயச் சிவாச்சாரியார்களி டம் பக்திபூர்வமாக ஒப்ப டைக்கப்படுகின்றது.

இவ்வாலயத்தில் நேரம் தவறாத பூசை வழிபாடுகள், அர்ச்சனை வழிபாட்டிற்கு ஒரு ரூபாய் மட்டும் உற்சவ காலங்களில் முருகப் பெருமான் தினமும் வெவ்வேறு அலங்கார வடிவில் வந்து அடியவர்களுக்கு அருள் மழை பொழிகின்றார். ஆலய சிவாச்சாரியார்கள் கழுத்தில் உருத்திராட்சை மாலையுடன் ஒரே சீரான ஆடையுடன் காணப்படுகின்றார்கள். ஆலய பணியாளரும் தனியான சீருடையுடன் காணப்படுகின்றனர்.

ஆலயத்தில் காவடிகள் ஆட்டத்தினைக் காணலாம். ஆட்டக்காவடி, பறவைக் காவடி, செடில்காவடி, தேர்க்காவடி, புஸ்பக்காவடி போன்ற பல காவடிகள் ஆடி அடியவர்கள் தம் நேர்த்தியை நிறைவு செய்து முருகன் அருள் பெறுகின்றனர்.

நல்லூர் ஆலய வீதியில் வழிபட்டு யோகர் சுவாமி கள், செல்லப்பா சுவாமிகள் போன்ற பல சித்தர்கள் உருவானார்கள்.

தேர்த்திருவிழா- அழித்தலையும் தீர்த்தத் திருவிழா- அருளளையும் குறிக்கும். இத் தேர்த்திருநாளில் தேவர் சிறை மீட்டுக் காத்த முருகப் பெருமானை வணங்கி, வழிபட்டு, நல் திருவருள், நல்பேறு என்பன பெறுவோமாக

நயினை
விசு இராசநாயகம்

---

வரலாற்றுப் பெருமையும் வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட நல்லை நகர் செவ்வேள் சித்திரத் தேரில் பவனி வரு கின்றார். நல்லூர் தமிழ் அரசர்கள் காலத்தில் இராஜதானியாக விளங்கியது. அக்காலத்தில் புவனேகபாகு என்ற புண்ணியவான் பெருங்கோயில் அமைத்த சிறப்பை பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள் பல்வேறு சந்ததர்ப்பங்களில் பேசியும் எழுதியும் உள்ளார்.

அன்று முதல் இன்று வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் சிறப்பை கண்டு இன்புறாத அடியார்கள் இல்லை எனலாம். நேர நியமம் தவறாது நடைபெற்று வரும் நித்திய பூசை, நைமித்திய விழாக்கள், மஹோற்சவம், மூர்த்தி அலங்காரம் , தெய்வ ஊர்திகளில் சுவாமி விக்கிரகங்கள் உற்சவம் கொள்ளும் காட்சி, சுவாமிகளைத் தொண்டர்கள் தாங்கிவரும் காட்சிகள் அனைத்தும் திருக்கைலாய காட்சியாக அமைகின்றன.

இன்று நடைபெறும் திருத் தேர்விழா ஒரு சமுதாய அடியார் உறவு விழாவாகவே கருத வேண்டும். இந்தத் தேர்விழாவில் பங்குபற்றி தேரை வடம்பிடித்து இழுக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. இவ்விழா அடியார்கள் உறவை வெளிப்படுத்தவே ஏற்படுத்தப்பட்டது. இறைவனின் திருவளைப் பெறுவதற்கு அடியார்கள் கூட்டுறவு வேண்டும் என சைவசித்தாந்தம் பெரிதும் வற்புறுத்துகின்றது.

அடியார்களில் அன்பு இல்லாதவர்களுக்கு ஈசனாகிய கடவுள் மேல் அன்பில்லாதவர் என்கிறது சிவஞான சித்தியார்.

இது போன்று சிவபக்தர்களோடு இணங்குக, அல்லாதவர்களோடு இணங்கற்க! என்று கட்டளை பிறப்பிக்கப்பிக்கின்றது சிவஞானபோதம். இதனை மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகத்தில் வரும் போற்றித் திருவகலில்



கோடிட்டு காட்டுகின்றனர். மேலும் உடையாள் நடுவில் நீ இருத்தி அடியேன் நடுவுள் நீ இருத்தி என்று திருவாசகத்தில் விளக்குகின்றார்.

நல்லைக் கந்தன் ஆலயத்தில் அருணகிரிநாத சுவாமிகளுக்கு கோயில் அமைத்து பூசை உற்சவம் காண்பதும், தனிச்சிறப்புடையது.

அருணகிரிநாதர் ஒரு சிறந்த அநுபூதிமான், பக்தி மார்க்கம் கொண்டவர். சுப்பிரமணியக் கடவுளை சிறப்பாக புகழ்ந்து பாடியவர். யான் எனது என்றும் ஆணவ நிலை இல்லாமல் வழிபடுகின்றவர்களுக்கு திருவருள் பாலிப்பார். அருணகிரிநாதருக்கு முருகப் பெருமான் தனக்கு " சும்மா இரு சொல்லற" என்ற மோனநிலை பற்றிய உபதேசம் செய்தமையை பல தடவை குறிப்பிட்டு இருக்கிறார். "சும்மா" என்ற சொல்லை எமக்கு முதல் முதல் அறிமுகஞ் செய்தவர் அருணகிரிநாதர் சுவாமிகளே.

நல்லை நகர் செவ்வேள் நல்லைக்கந்தப் பெருமானின் திருத்தேர் விழா சமுதாயப் பெருவிழாவாகும். சைவமும் தமிழும் ஒருங்கிணைந்து நல்லைக்கந்தப் பெருமரனின் திருவருள் சுரக்க பிரார்த்தனை செய்வோமாக.

கா.சிவபாலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017



நல்லை நகரில் இருந்து நகராட்சி புரியும்
முருகனின் தேர் காண வாரீர்!





தலைமைக் காரியாலயம்
S.V.M.Pvt. Ltd
No. 122, Dam street
Colombo-12

S.V. முருகேசு
இல. 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

S.V. முருகேசு
கரடிப் போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

S.V. முருகேசு
ஆவரங்கால்,
புத்தூர்.


S.V. முருகேசு
இல. 158, 160, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

S.V. முருகேசு
இல. 106, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லைக் கந்தன் இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்

S.V. முருகேசு உரிமையாளரும் ஊழியர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓம் ஓம் ஓம் சிறப்புமலர் - 20.08.2017




## LAKELAND INTER AMERICAN SCHOOL JAFFNA

ADMISSIONS ARE OPEN FOR MONTESSORI
(AMI METHOD) ENGLISH MEDIUM



**HURRY TO REGISTER**
**AGE GROUPS 2 1/2 YEARS TO 5 1/2 YEARS**

- எமது கற்பித்தல் முறைமையானது (AMI METHOD) இல் ஆங்கில மொழி மூலம் (ENGLISH MEDIUM). கருவிகள், உபகரணங்கள் கொண்டு காட்சிப் படுத்தி (APPARATUS) பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் சிறார்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல் ஆகும்.
- 2 1/2 வயது தொடக்கம் 5 1/2 வயது வரையுள்ள குழந்தைகள் எமது பாடசாலைக்கு உள்வாங்கப்படுவார்கள். ஆர்வமுள்ள பெற்றோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**OUR VISION**

- To become a model school which transforms personalities into academically sound, physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

**OBJECTIVES**

- To create an opportunity- filled environment conducive to the child to explore the environment at his/ her own capacity and carve his/ her niche in today's world.
- To provide enriching strategies that would encourage students to be goal- oriented and to be self- managers.
- To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL educaion,satiating the need of the intellect, the body and the soul.

**CONTACT OUR OFFICE FOR APPLICATION FORM AND FURTHER DETAILS**

**154 , BROWN ROAD, JAFFNA.**
**TEL: 021 222 6242, HOT LINE: 077 244 4172**



அன்னக்கிளி
ஹோட்டல்


இல. 128, கண்டி வீதி,
கச்சேரியடி.

சைவ, அசைவ
உணவகம்




விழாக்கோலம் பூண்ட
நல்லூரானே
உனைக்காண கண்கோடி
வேண்டுமையா! பார் புகழும்
வெற்றித்திலகமே
தேரேறிவாருமையா!



சிறி சிவாஞ்சனா
ஜூவல்லறி

உங்கள் மனம் கவரும் காவிய
நய மிகு கலைத்துவமான ஆபரண
வகைகளின் களஞ்சியம்



தங்கமயமான வாழ்வுக்கு
தனித்துவமிக்க ஓர் இடம்

Sri Sivanchchana
Jewellery

149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 149A, Kasthuriar Road, Jaffna. T.P.021 222 9227

Specilist in Wedding Sarees & Shalwar Kameez



VANI TEX
வாணி ரெக்ஸ்





No. 81, Grand Bazaar, Jaffna.
T.P. No.: 021 222 5578

இல. 81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓம் ஓம் ஓம் சிறப்புமலர் - 20.08.2017


## அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமணமண்டபம்

## ANNAMALAYAN SRI RAGAVENTHIRAR CULTURAL WEDDING HALL

திருமண வைபவங்கள், பதிவு திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மற்றும் வங்கிகள், கம்பனிகளின் வைபவங்கள், பாடசாலை நிகழ்வுகள் ஆகியவற்றை உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடன் சிறப்பாக நடாத்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்...






மேலும் புதுப்பொலிவுடன் புதிய பைபர் மணவறை அமைக்கப்பட்டிருப்பதால் திருமணமுகூர்த்த நாட்களும் மற்றும் நிகழ்வுகளும் பதியப்பட்டு வருவதால் நீங்களும் உங்களுடைய நிகழ்வுகளை கூடிய விரைவில் முற்பதிவு செய்து கொண்டால் இடம் கிடைக்காமல் போவதை தவிர்த்துக்கொள்ளலாம்.

கீழ் உள்ள முகூர்த்த நாட்கள் வெற்றிடங்களாக இருப்பதால் இப்போதே பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.
Sep - 08.09.2017, Nov - 09,15,23,25,
Dec - 04, 14

**ANNAMALAYAN SRI RAGAVENTHIRAR ENTERPRISES (PVT) LTD**

இல. 542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 373 4116, 021 222 1355, 021 222 1356
மின்னஞ்சல் : asrhall@hotmail.com
Find us on : Facebook.com / Jaffnaasrenterprises



நல்லூரான் தேர்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்

மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனமானது தனது சேவையினை இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் விஸ்தரித்து சிறப்பான சேவையினை கடந்த 47 வருடங்களாக நடாத்தி வருகின்றது. இச்சேவையில்

- பாதுகாப்புச் சேவை
- தீயணைப்பு பயிற்சி சம்பந்தமான உபகரணங்கள் வழங்கல்
- தானியங்கி கமராக்கள் வழங்கல் சேவை

போன்ற இதர சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது

## மேக்கன்ரைல் ரிக்குவார்மென்ற் ரிக்கவறி & இஞ்சினியரிங்

இச் சேவையின் கீழ் பின்வரும் சேவைகளாற்றப்படுகின்றன

மின் இணைப்பு வேலைகள்
பிளம்பிங் வேலைகள்
அலுமினிய பிற்றிங் வேலைகள்
பெயின்ரிங் வேலைகள்



## மேக்ஸ் கிளினிங் சேவை

துணை நிறுவனமான மேக்ஸ் கிளினிங் சேவை மேற்போன்ற இடங்களிற்கும் சுத்திகரிப்புச் சேவையை வழங்கி வருகின்றது

**651/03, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
© 0777730597, 021 222 2461, 021 221 6114, 021 221 6111
021 222 6087, தொலைநகல் 021 222 1872 - Email. mercantile2009@yahoo.com



# NORTH LANKA IIT

இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**B.Sc in Computer Science**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: O/L or A/L

**B.Sc in Compter Science(Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

**M.Sc. in Computer Science**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: Any Degree

**Bachelor of Education (B.Ed.)**
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

**Bachelor of Education (B.Ed.) (Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 2 Years Entry Qualification: 2 Year Diploma Training College / College of Education

**B.Sc. in Civil Engineering (Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

**Master of Public Administration (MPA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

**Bachelor of Business Administration(BBA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

**Master of Education (M.Ed.)**
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

**B.Sc in Physical Education And Sports**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**Master of Business Administration (MBA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

**Bachelor of Business Management (BBM)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

**Bachelor of Business Administration (Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: HNDA

நீங்கள் எல்லாம் வல்ல நல்லூர் முருகப்பெருமான்அருள்பெற பிரார்த்திக்கின்றோம்

முழு விவரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்
North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.
Ph:0767504535 / 0214927088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறி வரும் நல்லூர் கந்தனைக் காணா
கண் என்ன கண்ணே! கற்பூர ஒளி காணா
கண் என்ன கண்ணே! ~ கோபிகிருஷ்ணா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எல்லாமும் நீ என்று உணரா என் அறியாமை போக்கு முருகா...

நல்லூர் கந்தப் பெருமானுக்கு இன்று தேர்த் திருவிழா. சண்முகப் பெருமான் தேரேறி வந்து தன் திருப்பெருவடிவை அடியார்களுக்கு காண்பிக்கும் பெருநாள்.

இலட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி சண்முகப்பெருமான் தேரேறி வரும் காட்சியைக் கண்டு களிப்புறுவர்.

இந்நாளில் வேற்பெருமானிடம் விடும் விண்ணப்பம் என்ன உண்டென்று சிந்திக்கினும் ஒன்றும் புரியா புரிதலே தெரிகின்றது.

உரிமை ஒன்றும் தரா உன் திருவிழா காட்சி காண்கிலேன் என்று கடும் விரதம் கொண்டாலும் சண்முகப் பெருமான் தேரேறி வருகிறான் என்றவுடன் எக்குறை சொல்ல;

ஏன்தான் அவன் திருவிழா காணாமல் விடுவதென்று தீர்மானம் கொண்டேனோ என்று ஏங்குதல் அன்றி ஏதும் உணர முடியவில்லை.

நல்லூர்க் கந்தனுடன் நான் கோபம் என்றாலும் தேரேற சண்முகன் தென்னகத்து பட்டாடையும் தகதக என மின்னும் பொன் ஆபரணமும் புனைந்து தேவியர் இருவருடன் எழுந்துவரும் காட்சி இருக்கிறதே. அட!எல்லாம் நீயடா. நீ இருக்க இல்லை என்று என்னதான் உண்டு என்று உணரப்பெறாதார் யார் உளர்?

உள்வீதியில் வசந்த மண்டபத்து வாசஸ்தலத்தில் இருந்து சண்முகப் பெருமான் தேரேற எழுகின்றபோது விண் அதிரும் மங்கள வாத்தியம் நான் எனும் அகந்தை போக்கும்.

அவன் அசைந்து வேகமாய் ஓடி பின்னகர்ந்து முன்னோடி வரும் காட்சி எனை மறந்து அவன் திருவடி நினைக்கும்.

உள்வீதி கடந்து வெளிவீதி வந்து வெள்ளமாய் நிற்கும் அடியார்களை எட்டிப்பார்ப்பது போல அவன் வரும் காட்சி அடடா மனிதப் பிறவி பெற்றதால் பெரும்பேறு இதுவன்றோ என்று மனம் புளகாங்கிதம் கொள்ளும்.

அந்தக் காட்சியில், களிப்பில், பேருவகையில், எது உரிமை, எது சுதந்திரம், எது வாழ்வு எல்லாம் மறந்து அவன் தேரேறும் திருக்கோலமே அனைத்தும் என்று உணரப்படும்.

ஆம், நல்லூர் சண்முகப் பெருமான் எங்கள் தலைவன். அவனே எங்கள் மன்னன். எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னாட்டில் இருந்தாலும் அவன் நெற்றிக்கண் உதித்த சண்முகப் பெருமான் எங்கள் நல்லூரில் இருக்கிறான்.

அதனால்தான் எந்நாட்டவர் வந்தாலும் அவன் திருக்கோலம் காண தவமிருப்பர். என்னதான் இருந்தாலும் எங்கள் இளைஞர்கள் நல்லூர் வீதியை தம் உடம்பால் வலம் வரும் காட்சி இருக்கிறதே இவ் அற்புதம் எங்கும் காண்கிலோம். அதிகாலை பொழுதில் அங்கப்பிரதட்சணம் நல்லூர் வீதியில் நடந்தேறும்.

அரோகரா... முருகா... கந்தா! நல்லூர் வேலா! என்ற கோசம் கேட்டு கதிரவனும் அதைக் கண்டிட அவாக் கொண்டு மேலேழுவான்.

ஆகா இத்துணை மக்கள் நல்லூர் மண்ணில் நிற்பதால் சண்முகன் தேரேற வருகிறான் என்று அவனும் களிப்புறுவான்.

எங்கள் மக்கள் வைகறையில் துயில் எழுந்து நீராடி தமை மறந்து பாடி நல்லூர் முருகனை தேடி ஓடி வருகின்ற அளவில் சண்முகா உன்னிடம் என்னதான் உண்டு எனக்குரை.

அழித்தல் தொழிலே தேர்திருவிழாவின் தத்துவம் என்றால் நான் எனும் என் அகந்தை அழி; தமிழருக்கு தீங்கு செய்வார் தீமை அழி; உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் கயமையை அழி; பதவி எனும் பேராசை பித்தை அழி; சண்முகப்பெருமானே! என்று இரங்கும் என் வேண்டுதல் அளி.

அட என் திருக்கோலம் காணமுடியா இப் பித்தன் பிதற்றல் என்று நீ நினைத்தாலும் உன்னையே பின் தொடர்வேன் என் தலைவிதி போக்கு முருகா!

ஒருக்கால் தேர் ஏறமுன் திருக்கோலம் எனக்கு காட்டி அருள். நீ இருக்க எனக்கு என்ன குறை சண்முகா!

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தை அடி மட்டத்திலிருந்து கட்டியெழுப்ப வேண்டும்

## அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவிப்பு

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எங்கள் மாகாணத்தினையும் ஏனைய தென் மாகாணங்களையும் ஒரே தராசில் வைத்து பார்க்கமுடியாது. நாங்கள் அடி மட்டத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட வேண்டியவர்களாக உள்ளோம் என வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் என்ற வகையில் 5 மாவட்ட அரசாங்க அதிபர்களையும் பிரதேச செயலாளர்களையும் நேரடியாக சந்தித்து ஒருமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளேன. மக்களுக்கான சேவையில் நாங்கள் பிரிந்துநின்று சேவை ஆற்றமுடியாது.

இன்று வடக்கிற்கு வரும் அபிவிருத்தி திட்டங்கள் எல்லாவற்றையும் மத்தியே தீர்மானிக்கின்றது. அந்த நபர்கள் தீர்மானித்து கொண்டு வரும் பல அபிவிருத்தி திட்டங்கள் இங்கு தோற்றுப்போகினறன.

ஆகவே வடக்கு மாகாணத்துடன் சேர்ந்தே இந்த அபிவிருத்தியை செய்யுங்கள் என கூறும்போது அவ்வாறான உடன்பாட்டுக்கு அர சாங்கம் வர தயாராக இல்லை.

எங்களிடம் உள்ள நிதியோ மிக சொற்பமான நிதி. ஆனால் தேவை நிறையவே உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எங்கள் மாகாணத்தினையும் ஏனைய தென் மாகா ணங்களையும் ஒரே தராசில் வைத்து பார்க்க முடியாது. நாங்கள் அடி மட்டத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட வேண்டியவர்களாகவுள்ளோம். இது தொடர்பாக பலமுறை நாங்கள் மாகாண சபையிலும் பேசியிருக்கின்றோம். ஜனாதிபதி பிரதமருடன் பல முறை பேசியும் அவர்கள் அதனை விட்டுக் கொடுப்பதாக இல்லை.

ஆகவே நாங்கள் எங்களிடம் உள்ள நிதியில் சேவை செய்வதுடன் சந்திக்கும் வெளிநாட்டு தூதுவர்களூடாக சில திட்டங்களை கோர உள்ளோம். அவர்கள் நிச்சயமாக அதனை செய்வார்கள். எங்களுடைய கலாசாரத்தினை மீறிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க முடியாது. எங்களுடைய கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை கட்டிக்காக்கும் அபிவிருத்திகளை எனறும் நாம் எதிர்ப்பதில்லை. ஆனால் அதனை செய்ய விடாமல் பல தடைகள் வந்து கொண்டிருக்கின்றன.

உண்மையாகவும் விசுவாசமாகவும் நேர்மையாகவும் மக்களுக்கு சேவை செய்வேன் என்பதனால் 5 திணைக்களங்களை உள்ளடக்கி எனக்கு அமைச்சுப் பதவி தரப்பட்டுள்ளது. நிச்சயமாக என்னால் முடியும். ஏனெனில் நான் போரின் முடிவில் நிராயுதபாணியாக எனது கணவரை கையளித்து விட்டு 3 பெண் பிள்ளைகளுடன் தாயாக, தந்தையாக, நண்பியாக, சகோதரியாக என எல்லா பாத்திரத்தையும் வகித்துள்ளேன்.

ஒரு பெண் கணவன் இலலாமல் எவ்வாறு தன்னையும் பாதுகாத்து தனது பிள்ளைகளையும் பாதுகாத்து வாழ முடியும் என்பதனை அனுபவ ரீதியாக உணர்ந்தவள். ஆகவே பெண்களின் பிரச்சினையை புதிதாக யாரும சொல்லத் தேவையில்லை.

போரின் பின்னரான அதிகளவான பாதிப்புக்குள்ளான வட மாகாண மகளிருக்கான தனியான திணைக்களமோ அல்லது அலகோ இல்லை. ஆகவே நாங்கள் அதனை ஒரு பகுதியாக ஆரம்பிப்பதற்கு திட்டமொன்றினை தயாரிக்கின்றோம்.

வட மாகாணத்தில் பல பிரச்சினைகளை பெண்கள் எதிர் கொள்கின்றார்கள். ஆகவே அதற்கான அலகு வட மாகா ணத்தில் இயங்க வேண் டும்.

நாங்கள் மகளிர் விவகார கொள்கையை வகுத்துள்ளோம். புனர்வாழ்வு தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சரை நேரடியாக சென்று சந்தித்து போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு விசேட வேலைத்திட்டத்தினை செய்து தரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துளளோம்.

அத்துடன் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சர் என்ற வகையில் அழுத்தங்களை கொடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளேன். இந்நிலையில் மக்களிடம் அதிக வாக்குகளை பெற்ற நான் சேவை செய்ய வேண்டியது ஜனநாயக உரிமை. அவ்வாறு செய்யாமல் இருக்க முடியாது. மாகாணசபை உறுப்பினராக இருந்த போதும் மக்களுக்கான சேவையை செய்து கொணடே இருந்தேன்.

அரசியல் அரங்கில் இருந்து நான் வெளியேறிவிட முடியாது. அரசியல் நோக்கத்தோடு இருந்து அரசியலுக்கு வந்தவள் அல்ல. நான் அர சியல்போராளியாக இருக்க முடியுமே தவிர அரசியல்வாதியாக இருக்கமுடியாது.

30 வீதமான பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்ற பிரசாரத்தினை நான் செய்து வருகின்றேன். 52 வீதமான பெண்கள் உள்ள இடத்தில் 50 வீதமான பெண்களாவது அரசியலுக்குள வரவேண்டும். நான்ஒரேயொரு பெண்ணாக இருந்து கொண்டு இந்த அரசியலுக்குள் எவ்வாறு நெருக்குதல் படு கின்றேன், ஒடுக்கப்படுகின்றேன் என்பது எனது வேதனையான குரல். ஆகவே பெண்கள் அதிகளவில் அரசியலுக்குள் வர வேண் டும். அப் போதுதான் பலமாக இருக் கும்.

வெற்றியீட்டும் பெண்கள் என்றால் அரசியல் தலைமைகளுக்கு பயம். தங்களுடைய ஆசனம் அடிபட்டுப்போய விடும் என்பதனால் தோற்றுப் போகின்ற அல்லது மௌன மாக இருந்து தலையாட்டும் பெண்களை அரசியலுக்குள் கொண்டு வர அவர்கள் தயாராக இருப்பார்கள்.

ஆகவே கிராமங்களில் இருந்து மக்க ளுக்கு சேவை செய்யும் பெண்கள் அரசியலுக்குள் வரவேண்டும் என்றார். (8)

## விசேட இசை அர்ச்சனை

நல்லூர்க்கந்தன் மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் இரதோற்சவ, தீர்த்தோற்சவ திருவிழா விசேட இசை அர்ச்சனை நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 8.45 முதல் பிற்பகல் 3 மணி வரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

## நீர்கொழும்பில் துப்பாக்கிச்சூடு சந்தேக நபர்களுக்கு மறியல்

நீர்கொழும்பு - குரணை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரகள் இருவரையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் ஆர்.ஜி.என். கே. ரன்கொத்கே நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் சந்தேக நபர்களான, தெல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த வெலமெத கெதர அருணசாந்த, ராகமை பிரதேசத்தைச் சேர்ந்த அளுத்வத்தை கங்காணம்லாகே தரிந்து மதூச ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவ... ரும் ... 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நீர்கொழும்பு பதில் நீதவான் கருணா ஜீவகமகே குணதாச முன்னிலையில் ஆஜர் செய்தபோது, 18ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு, நீதவான்உத்தரவிட்டார்.

இதையடுத்து, சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே, நீதவான் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்கள் இருவரும் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக காயமடைந்த நிலையில், தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்... குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குமரனே அருள்வாய்



நல்லூர் வேலவனின் நாமங்கள் பகிர
பொல்லாத வினையகன்று போயோடும்
எல்லாத் தேவைகளும் எமக்கு நிறைவேற
நல்லை மணித் தேரேறும் நாயகனே அருள்வாய்

பல்வகையினரும் பணிந்தோற்றி மணியொலிக்க
வல்லோனின் பக்தர்கள் ஆர்ப்பரிப்பது அழகு
கல்லையும் கரைக்கும் கருணை ஒளியே
சொல்லை உருக்கி பாக்கள் தந்தோம் அருள்வாய்

எல்லைகள் கடந்து எங்கும் பதற்றங்கள்
அல்லல் களைந்து மனதிற்கு அமைதிதா முருகா
வில்லங்கங்கள் களையும் நல்ல குருநாதனே
வெல்ல ஒரு வரம் தந்து அருள்வாய் குமரனே!

நாபரணி

## கண்ணெதிரே வந்தருள்வாய் குமரா!

குறவள்ளி மனங்கவர்ந்த குமரேசா
கும்பிட்டோர்க் கருளும் குகநேசா
பகையென்று வந்தசூரர் குலமறுக்க
படைகொண்டு தேவதுயர் நீத்தவனே
வண்டமிழின் இறைநீயென்றே - முன்னோர்
வாழ்த்திய வழிவந்த நின்னவரெல்லாம்
வந்தனன் நல்லைக் கந்தனென்றே
வடந் தொட்டசைத்திடும் தேரேறி
கண்ணெதிரே வந்தருள்வாய் - தேவசேனை
கடிமணம் புரிந்த தேவே!

சிரபுரத்தான்
மண்டைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர்க்கந்தன் தேர்த்திருவிழா

ஓ ஓ ஓ சிறப்புமலர் - 20.08.2017








# ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்





**வழங்கப்படும் சேவைகள்:** உடல்நிறை குறைத்தல்.தீராததலைவலி, பாரிசவாதம், முகநரம்பு பாதிப்பு, சோரியாசிஸ், ஞாபகமறதி, முள்ளந்தண்டுப் பிரச்சினை, வாத ரோகம், மூட்டுக்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மாறாத சர்மரோகங்கள், வயிற்றுப்புண், நீரிழிவுரோகம், மாறாத புண்கள், நீண்டகால சளித்தொற்று, மூட்டுவிலகல், தோள்மூட்டில் ஏற்படும் வலி, பசியின்மை.குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் சளி, உணவு எடுக்க விரும்பமின்மை போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகிறது. பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism Spectrum disorders (Global Mental Di sorders) இவற்றிற்கு கேரளா ஆயுர்வேத சிகிச்சை நடைபெறுகிறது.

நீரிழிவு நோய்க்கு குருதிக்குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு நாவல் கோப்பி விற்பனை செய்யப்படுகிறது. இக்கோப்பியானது நீங்கள் உபயோகிக்கும் மருந்துகளுடன் சேர்த்து பானமாக உபயோகிக்கும் பட்சத்தில் 2-3 கிழமைகளில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் குருதிக் குளுக்கோசு குறைவடைகிறது. பின் உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை குறைவாக உபயோகிக்கலாம். பக்கவிளைவற்றது.

### முள்ளந்தண்டு பிரச்சினைக்கு தீர்வு

யாழ்ப்பாண.இந்திய கேரள ஆயுர்வேத. சித்தமருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்க விளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது. உங்களுக்கு ஏற்பட்ட முள்ளந்தண்டுப்பிரச்சினைகளுக்கு சத்திரசிகிச்சையின்றி ஆயுர்வேத சிகிச்சையினால் 2 வாரங்களில் தீர்வளிக்கப்படுகிறது.

காலில் ஆணிக்கூடுகள், மாறாத தோல் வியாதிகள், குதிக்கால் வலி, மாறாத புண்கள், சிறுநீரக செயலிழப்பு, இருதய அடைப்பு என்பவற்றுக்கும் சிறப்பு சிகிச்சை வழங்கப்படுகிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி

இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195 முற்பதிவு அவசியம்
Dr.G.Sritharan B.S.M.S (SL) M.Phil (Jaffna.) ,
Dr(Mrs) S.Anpuchelvy B.S.M.S (SL),M.D(S)(India),
Herbal Health Care Centre
65, கே.கே.எஸ் வீதி, கொக்குவில். (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீவ சமாதி அடைய...

உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

துறவி ஆடைகளுடன் வேலூர் ஆண்கள் மத்திய சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக இருக்கும் முருகன், சிறைத்துறை தலைவருக்கு, கடந்த மாதம் மனுவொன்றை, வேலூர் சிறை அதிகாரிகள் மூலம் அனுப்பியிருந்தார். அம்மனுவில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, சிறைத் தண்டனை அனுபவித்துவரும் நிலையில், தனது விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது. சிறை வாழ்க்கையை வெறுப்பதாகவும் ஜீவசமாதி அடைய அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த மாதம் 17ஆம் திகதி முதல், சிறையில் வழங்கப்படும் உணவை சாப்பிட மறுத்து, பழங்களை மட்டும் சாப்பிட்டு வந்தார். அவர் அளித்த மனுவின் மீது, கடந்த ஒரு மாதமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், வேலூர் சிறைச்சாலையில், வடக்கு நோக்கி அமர்ந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை முருகன் நேற்றுமுன்தினம் தொடங்கியுள்ளார். பழங்களை சாப்பிட மறுத்ததுடன், தண்ணீரை மட்டும் குடிக்கிறார் என்று கூறப்படுகிறது. ஜீவசமாதி அடைவது குறித்து, தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை மனுவையும் அளித்துள்ளார்.

இது தொடர்பாக சிறைத்துறை அதிகாரிகள் கூறும்போது, சிறையில் ஜீவசமாதி அ[illegible]ய அனுமதிக்க வேண்டும் என்று, ஏற்கெனவே மனு அளித்திருந்தார். இதன் மீது எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடங்கியுள்ளார்.

தொடர்ந்து அவர் உணவு தவிர்ப்பு இருந்தால், ஓரிரு நாளில் அவரை சிறைச்சாலையில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். (மு-11)

## வடக்கு-தெற்கு...

தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினர் மக்கள் அபிமானம் பெற்றவர்களாவர்.

அநீதிக் காரர்கள் யுத்த இராணுவத்தினராக இருக்க முடியாது என்றும் குறிப்பிட்ட இ[illegible]ணுவத் தளபதி,

எனவே, இராணுவத்தில் எவரேனும் குறறச் செயல்களில் ஈடுபட்டிருப்பின் அவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## இராணுவத்தில்...

செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் ஊடக பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்கள் மீண்டும் இராணுவத்தில் சரணடைவற்கான பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பொது மன்னிப்பு காலத்தில் இராணுவத்தில் சரணடையாதவர்களை கைது செய்வதற்கு நேற்றைய தினம் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது 724 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (மு-11)

## இந்திய இராணுவ...

உள்ளிட்ட இந்திய இராணுவ அதிகாரிகள் குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு இடங்களை பார்வையிட்டதோடு, கோப்பாயில் உள்ள இந்திய இராணுவத்தின் கல்லறைக்கு சென்று மரியாதை செலுத்தியிருந்தனர்.

கோப்பாய் தெற்கு பகுதியில் அமைந்திருந்த இந்திய இராணுவ அதிகாரியுடைய கல்லறை ஒன்றை 30 வருடங்களின் பின்னர் மீண்டும் புனரமைப்பதற்கான நடவடிக்கை இரண்டு நாட்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தினால் திடீரென மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோப்பாய் தெற்கு இராஜவீதியில் உள்ள வெள்ள வாய்க்கால் பிராயடி பகுதிக்கு அண்மையில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாமில் பொறுப்பதிகாரியாக இருந்த கப்டன் பாத் வால் என்பவர் அந்த கால பகுதியில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுடனான மோதலின் போது உயிரிழந்துள்ளார்.

அப்போது குறித்த பகுதியில் அவரின் நினைவாக கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் அந்த கல்லறை தற்போது வரை கவனிப்பாரற்று இருந்துள்ளது. இந்த நிலையிலேயே மீண்டும் குறித்த கல்லறையை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளில் இலங்கை இராணுவம் இறங்கியிருந்தது.

இந்த நிலையில் தான் கடந்த 1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்குறித்த இராணுவ அதிகாரியுடன் பணியாற்றிய சக இராணுவ அதிகாரியாக இருந்த பி.எம். ஹரிஸ் என்பவர் தற்போது இந்தியதெற்கு பிராந்திய இராணுவ படைகளின் தளபதியாக உள்ளார், இவரின் கோரிக்கைக்கு அமையவே குறித்த கல்லறை புனரமைக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று 19ஆம் திகதி குறித்த பகுதியில் உள்ள சமாதிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக குறித்த தளபதி அவருடன் இராணுவ உயர் அதிகாரிகளான தளபதி ஹரேசின், தளபதி வி.கே.சிங் மற்றும் இலங்கை இராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து குறித்த கல்லறைக்கு அஞ்சலி செலுத்தியிருந்ததோடு, கோட்டை, பலாலி, மற்றும் இந்திய இராணுவம் மீது தமிழீழ விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடங்களுக்கும் சென்று பார்வையிட்டிருந்தார்.

இந்த நிகழ்வுகளில் இலங்கை இராணுவத்தின் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் காணப்பட்டன. முன்னதாக குறித்த நிகழ்வுகளுக்கு ஊடகங்களுக்கு அனுமதி இல்லை என கூறப்பட்ட போதிலும், பின்பு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கல்லறை அமைந்துள்ள தோட்ட காணி தனியார் ஒருவருக்கு சொந்தமானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (மு-4,9)

## ஜே.வி.பியால் முடிவது...

ஊழல் அற்ற மோசடிகள் அற்ற நாடு ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் தங்களது ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தினையும் சந்தித்தார்.

இதன்போது இலங்கையில் ஊழல்களை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் ஜே.வி.பியின் பொதுச்செயலாளரும் கோப் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன் நெத்தி தெளிவுபடுத்தினார்.

இந்த சந்திப்பின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தற்போதைய நிலைமை நல்லாட்சிக்கு முன்னர் இருந்த செயற்பாடுகள் அதன் பின்னரான நிலைமைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

**பிரதான கட்சிகளின்**
**70 ஆண்டு கால ஆட்சி தோல்வி**

இதேவேளை அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (ஜே.வி.பி) அநுர குமார திஸாநாயக்க தெரிவிக்கையில்,

கடந்த 70 ஆண்டுகளாக நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகள் நாட்டை நிர்வகிப்பதில் தோல்வியடைந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய பிரதான கட்சிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக இணைந்து செய்தும் அவற்றின் தோல்வியை காட்டியுள்ளன.

மைத்திரி-ரணில் அரசாங்கம் தொடர்ந்தும் தனது இயலாமையை உறுதிப்படுத்தி வருகிறது என[illegible] குறிப்பிட்டுள்ளார். [illegible]

# 3 அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டம்

தண்டனை இல்லாமல் தண்டனை கொடுத்து அரசியல் கைதிகளை பழிவாங்கும் செயலை கண்டித்து அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள மூன்று அரசியல் கைதிகள் இன்றைய தினத்தில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்

அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள மூன்று அரசியல் கைதிகளுக்கு கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் தறுவாயில் இருக்கும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம், வேறு மாவட்டங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

எனவே மீண்டும் வேறு நீதிமன்றங்களுக்கு குறித்த வழக்கை மாற்றினால் தொடர்ச்சியாக இந்த வழக்கு இடம்பெறும் தண்டனை இல்லாமல் தண்டனை கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். இது அரசியல் கைதிகளை பழிவாங்கும் நடவடிக்கை எனவும் தெரிவித்து, தமது வழக்கு வவுனியாவிலேயே நடைபெற வேண்டும் என்றும், வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக்கூடாது என்றும், கோரி மேற்குறித்த அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். (மு-9)

# போராட்டங்கள் நடத்தப்படும் லஹிரு வீரசேகர

மாணவ தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும், மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் தொடரும் என அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய தலைவர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர் ரயன் ஜெயலத் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் சரணடைந்தார். சரணடைந்த அவரை பொலிஸார் கைது செய்திருந்த நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது குறித்து கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## சிகிச்சை பலனின்றி...

சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

கல்வியங்காடு சந்தியில் இருந்து பருத்தித்துறை நோக்கி துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நபர் மீது பின்னால் வந்த மோட்டார் வண்டி தடுமாற்றத்தால் கடந்த 2ஆம் திகதி மோதித்தள்ளியுள்ளது.

இதில் திருநெல்வேலி கிழக்கு திருநெல்வேலியை சேர்ந்த கதிரவேலு கிருபாகரன் (வயது 54) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் 4.00 மணி அளவில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டுள்ளார். (மு)

## வளர்ப்பு மாடு...

5ஆம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே பகுதியை சேர்ந்த முனியாண்டி பொன்னையா (வயது 51) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)


31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் வல்லிபுரம் பாலசிங்கம்

கடந்த 21.07.2017 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வல்லிபுரம் பாலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18.08.2017 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20.08.2017) ஞாயிறு காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இழப்பின் போது நேரில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், துண்டுப் பிரசுரம் மூலமும் பத்திரிகை மூலமும் மற்றும் மலர்வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை இரு கரம் கூப்பி தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சிறுவிளான், இளவாலை. (183) இங்ஙனம்:-குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 60 ஆவது அகவையிலே..!

**20-08-2017 கதிரவேல் நித்தியானந்தன்**




பண்பின் இலக்கணமான உங்கள்
பாசத்தில் இந்த பார் வியக்கும்,
அன்பின் ஊற்றாகி,
அறிவில் காட்டாறாகி,
அழியாத சொத்து நீங்கள்,
வானவில்லால் ஒருங்கிணைந்த
வார்த்தைகள் கொண்டு
வண்ணக் கவிதையில்
உளமார வாழ்த்துகின்றோம்
நெஞ்சப் பெரு வெளி தனில்
எங்கள் உள்ளங்கள்
வண்ண மலர் தூவி
என்றென்றும் வாழ்த்துக் கூறும்
வாழ்க நீங்கள் பல்லாண்டு!

- குடும்பத்தினர் -

(155)


## காணி விற்பனைக்கு

பிரதான வீதியில் நல்ல வசதிகள் உடைய சுற்றாடலில் சித்தன்கேணிக்கு அண்மையாக காணி 6 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0754890615

(182)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9338)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500 (C-9347)

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

**நல்...** இன்றைய தேர்த்திருவிழாவைக் காண உலகின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக் கணக்கான அடியவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் AYARPADI ASTROLOGY

ஆயர்பாடி - ராமகிருஷ்ணன்

28, கல்லூரி கலவளை ஒழுங்கை, சண்டிலிப்பாய் மத்தி T.P-0758-006096 (140)

## WIN Repair

ACகளும் சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். (C-9381)

T.P-0779648942

## V2 TRAVELS




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (விசா எக்ஸ்ரென்சன்)

(C-9334)

0768227499

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

(C-9364)

# சசிகா லேணர்ஸ்

L

DS No - 882



வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.

**கிளை நிறுவனங்கள் :** 021 221 7678, 077 614 0361

மல்லாகம் : K.K.S வீதி , மல்லாகம். 021 224 3393 / 070 301 3014

வேலணை : வங்களாவடிச் சந்தி, வேலணை. 021 221 5472 / 070 301 3012

சங்கானை : ஓடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664 / 070 301 3016

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

Hotline - 077 722 6247

THE SASIKA LEARNERS


SasikaLearners sasikadrivingschool@gmail.com

# SARAS
## ENGINEERS & CONTRACTORS

**We strive to meet and exceed our client's expectations to foster long term partnerships.**

(C-9365)

- Luxury Homes Construction
- Building Construction
- Temple Construction
- Building Consultancy
- Bridge Construction
- Architectural Designs
- Interior Design
- Road Construction
- Renovation Works
- Molding Works
- Landscaping
- Aluminum Works





SARAS ENGINEERING

Madaththady, Tellipalai. | School Lane, Mathanai, Point pedro.

021 226 5929 | 0777 196 000

France: 00 33 6 10 72 73 63 Switzerland: 00 41 76 501 27 72

www.sarasengineers.com sarasengineering sarasjaffna@gmail.com

invitation cards posters brochures letter heads business cards Lables calendars magazines books tags t shirt flyers profiles Leaflets boxes event tickets banners certificates menus Stickers packaging digital name boards

# PRINTING

NEW arrival



**SCREEN PRINTING**

BAG | CAP | UMBRELLA
PVC PRODUCTS
CERAMIC PRODUCTS
AND ETC..

**STICKER CUTTING**

**4 FEET STICKER CUTTING MACHINE**

DESIGN CUTTING | WALL DESIGN CUTTING
SANDBLAST DESIGN CUTTING | LETTER CUTTING
VEHICLE STICKER CUTTING

(C-9366)



- தேர்ச்சி மிக்க வடிவமைப்பு
- உயர்தர பிறிண்டிங் சேவை
- சிறந்த வாடிக்கையாளர் சேவை

ideas PRINTERS

936A, K.K.S Road, Jaffna. (near the naachimar kovil) 021 222 7788


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.